



PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 221 24.03.2026 செவ்வாய்க்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 221 | Tuesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# வாக்குச்சாவடிகளில் முதல்முறையாக
# வாக்காளர்கள் செல்போனை வைக்க தனி அறை

## இந்தியத் தேர்தல் ஆணையம் ஏற்பாடு

**சென்னை, மார்ச் 24:**

சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளில் குடிநீர் உள்ளிட்ட குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வாக்குச் சாவடிக்கு வெளியே வாக்காளர்கள் செல்போனை பாதுகாப்பாக வைத்துவிட்டு செல்லவும் முதல்முறையாக வசதி செய்யப்பட உள்ளது.

இதுதொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் 6 மாநிலங்களில் இடைத் தேர்தல்களுக்கான அட்டவணை கடந்த மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலையொட்டி, வாக்குச் சாவடிகளில் ஒவ்வொன்றிலும் உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் செய்யப்படுவதை உறுதி செய்ய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.



அதன்படி, உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகளான குடிநீர், நிழலுடன் கூடிய காத்திருப்புப் பகுதி, தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை, போதிய வெளிச்சம், மாற்றுத் திறன்வாக்காளர்களுக்கான முறையான சாய்வுதளம், தரப்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு அறை மற்றும் முறையான வழிகாட்டி பலகைகள் ஆகியவை இடம் பெற வேண்டும்.

வாக்காளர்கள் உட்கார பெஞ்ச்: வாக்காளர்கள் தங்களது முறைக்காக காத்திருக்கும் போது அமருவதற்கு ஏதுவாக, வரிசையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் பெஞ்சுகள் அமைக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது. வாக்காளர் விழிப்புணர்வை வலுப்படுத்த, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 4 சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட வாக்காளர் வசதி சுவரொட்டிகள் முக்கியமாக காட்சிப்படுத்தப்படும்.

சுவரொட்டியில் விவரங்கள்: இந்த சுவரொட்டியில் வாக்குச்சாவடி விவரங்கள், வேட்பாளர் பட்டியல், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களின் பட்டியல் மற்றும் வாக்குப் பதிவு நடைமுறை ஆகிய முக்கிய விவரங்கள் இடம்பெறும். வாக்காளர்கள் தங்களது வாக்குச் சாவடி எண் மற்றும் அந்தந்த சாவடியின் வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண்ணைக் கண்டறிய உதவுவதற்காக, ஒவ்வொரு வாக்குச் சாவடி அமைவிடத்திலும் பிஎல்ஓக்கள், அதிகாரிகள் குழுவுடன் கூடிய வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்படும். வாக்காளர்கள் வாக்குச் சாவடி வளாகத்தை நெருங்கும் போது எளிதில் தெரியும் வகையில் இந்த உதவி மையங்கள் முக்கிய வழிகாட்டிப்பலகைகளைக் கொண்டிருக்கும்.

வாக்குச் சாவடி நுழைவு வாயிலுக்கு வெளியே வாக்காளர்களுக்கான செல்போன் வைப்பு அறை வசதி முதல்முறையாக அமைக்கப்பட உள்ளது. வாக்காளர்கள், வாக்குச் சாவடிக்குள் நுழைவதற்கு முன்பு தங்களது செல்போனை, நியமிக்கப்பட்ட தன்னார்வலரிடம் ஒப்படைத்துவிட்டு, வாக்களித்த பிறகு அதைபெற்றுக் கொள்ளலாம். இந்த பணிகளை தேர்தல் தேதிகளுக்கு முன்னதாகவே முடிக்குமாறு அனைத்து களப் பணியாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(24-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-10
பிறை: வளர்பிறை
திதி
சஷ்டி இரவு 7.30 வரை
பிறகு சப்தமி.
நட்சத்திரம்:
ரோகிணி இரவு 10.10 வரை
பிறகு மிருகசீர்ஷம்
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00-4.30 மணி
எமகண்டம்
காலை 9.00 – 10.30 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | நற்செயல் |
| ரிஷபம் | மாற்றம் |
| மிதுனம் | வெற்றி |
| கடகம் | கடமை |
| சிம்மம் | சிறப்பு |
| கன்னி | நன்மை |
| துலாம் | தாமதம் |
| விருச்சிகம் | மேன்மை |
| தனுசு | பாராட்டு |
| மகரம் | வரவு |
| கும்பம் | முயற்சி |
| மீனம் | கண்ணியம் |

# பறவை காய்ச்சல் எதிரொலி: தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

**சென்னை, மார்ச் 24:**

அடையாறு பகுதியில் சமீபத்தில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், எச்5என்1 எனப்படும் பறவை காய்ச்சல் பாதிப்பு இருந்தது உறுதியானது.

இதையடுத்து, கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமை செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியது. அதன்படி, தமிழக சுகாதாரத் துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பறவை காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவக்கூடும்.

பாதிக்கப்பட்ட பறவையிடம் இருந்தோ, மனிதரிடம் இருந்தோ மற்றவர்களுக்கு, 'வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

அதனால், காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், சென்னையை தொடர்ந்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் காகங்கள் உயிரிழந்தன. கிண்டி உயிரியல் பூங்காவில் பறவைகள் உயிரிழந்ததால், பூங்கா மூடப்பட்டது.

இது தொடர்பாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் பறவை காய்ச்சலால் காகங்கள் உயிரிழந்தாலும், மற்ற பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பாதிப்பு கண்டறியப்படவில்லை. காகங்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இறந்த பறவைகளை வெறும் கைகளால் அப்புறப்படுத்தக் கூடாது. அறிகுறிகள் இருந்தால், அலட்சியமாக இல்லாமல் உடனே மருத்துவரை அணுக வேண்டும். பறவை காய்ச்சலால் கோழிகள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

கோழி இறைச்சியை நன்கு வேக வைத்து சாப்பிட வேண்டும். தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து வருகிறது. பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம்" என்றனர்.

# டெக்சாஸில் இருந்து 47,000 டன் காஸ் இந்தியா வந்தது; ரஷ்யாவில் இருந்து 7 கப்பல்களில் கச்சா எண்ணெய் வருகிறது

**புதுடெல்லி, மார்ச் 24:**

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 47,000 டன் சமையல் காஸ் ஏற்றி வந்த கப்பல் நேற்று கர்நாடகாவின் மங்களூருக்கு வந்து சேர்ந்தது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போரால் இந்தியாவில் சமையல் காஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இது குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியனுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பிறகு ஈரான் ராணுவத்தின் சிறப்பு அனுமதியுடன் ஷிவாலிக் கப்பல், நந்தா தேவி கப்பல், ஜக் லட்கி கப்பல்களில் கச்சா எண்ணெய் இந்தியா வந்தடைந்தன.

இதற்கிடையில் வளைகுடா நாடுகளின் கச்சா எண்ணெய், சமையல் காஸ் (எல்பிஜி) போக்குவரத்து முடங்கியதால் அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து 22 லட்சம் டன் எல்பிஜியை கொள்முதல் செய்ய இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் ஒப்பந்தங்களை மேற்கொண்டு உள்ளன.

இதன்படி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 47,000 டன் சமையல் காஸ் ஏற்றி வந்த பைக்ஸிஸ் பயோனீர் கப்பல் நேற்று கர்நாடகாவின் மங்களூரை வந்தடைந்தது. மங்களூருவில் கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி சேமிப்பு கிடங்குகள் உள்ளன.

அங்கிருந்து கர்நாடகா, தமிழகம், தெலங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு பெட்ரோல், டீசல், எல்பிஜி காஸ் விநியோகம் செய்யப்படுகிறது.

மங்களூரு துறைமுகத்துக்கு அடுத்தடுத்து சமையல் காஸ் கப்பல்கள் வருவதால் தென் மாநிலங்களில் எல்பிஜி விநியோகம் அதிகரிக்கும் என்று பொதுத்துறை எண்ணெய் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் சீனாவுக்கு சென்று கொண்டிருந்த ரஷ்யாவின் 7 கச்சா எண்ணெய் கப்பல்கள் இந்தியாவுக்கு திருப்பி விடப்பட்டிருக்கின்றன.

இதில் அகுவா டைட்டன் என்ற கப்பல் சுமார் ஒரு லட்சம் டன் கச்சா எண்ணெயுடன் நேற்று முன்தினம் மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது. ரஷ்யாவின் 6 கச்சா எண்ணெய் கப்பல்களும் அடுத்தடுத்து இந்திய துறைமுகங்களை வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த இந்திய விமானப்படை வீரர் கைது

**ஜெய்ப்பூர், மார்ச் 24:**

அசாம் மாநிலம் திருப்ருகாரில் உள்ள சபுவா விமானப்படை நிலையத்தில் பல்நோக்கு ஊழியராக பணியாற்றி வந்தவர் சுமித்குமார் (வயது 36.) இவர் பாகிஸ்தான் உளவாளிகளுக்கு இந்திய ரகசிய தளவாட விவரங்களை பகிர்ந்ததாக கைது செய்யப்பட்டு உள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஜெய்சல்மாரில் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து சுமித்குமார் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. உத்தரபிரதேசத்தை சேர்ந்த சுமித்குமார் கடந்த 2023-ம் ஆண்டு முதல் பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டு உள்ளார்.

அப்போது போர் விமானங்களின் இருப்பிடம், ஏவுகணை அமைப்புகள் மற்றும் பணியாளர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் ஆகியவற்றை பாகிஸ்தான் உளவாளிகளுக்கு அனுப்பியதாக சந்தேகிக்கப்படுகிறது. கைதான அவர் ஜெய்ப்பூரில் உள்ள ஒரு மத்திய விசாரணை மையத்துக்கு அழைத்துவரப்பட்டு விசாரணை தொடர்கிறது.

# 15 நிமிடத்தில் மெசேஜ் தானாகவே அழியும்: வாட்ஸ் அப்பில் வரும் புதிய வசதி

**சென்னை, மார்ச் 24:**

பிரபல சமூக வலைத்தளமான வாட்ஸ் ஆப், பயனர்களை கவர புதுப்புது அப்டேட்களை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், பயனர்களின் தனியுரிமையை மேம்படுத்தும் விதமாக 'After Reading' எனப்படும் புதிய வசதியை வாட்ஸ் ஆப் அறிமுகப்படுத்த உள்ளது.

இந்த வசதியின் மூலம், ஒரு மெசேஜ் படிக்கப்பட்ட 15 நிமிடங்களுக்குள் தானாகவே அழிந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மெசேஜ் திறக்கப்படாமல் இருந்தால், அது 24 மணிநேரத்தில் தானாகவே அழிந்து விடும் என்றும் கூறப்படுகிறது. வாட்ஸ் ஆப் அப்டேட்களை வெளியிடும் 'வாபீட்டா இன்போ' இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

வாட்ஸ் ஆப்பில் ஏற்கனவே 'Disappearing Messages' என்ற வசதி உள்ளது. இதன்படி, பயனர்கள் குறிப்பிட்ட நபருக்கு அனுப்பும் மெசேஜ்கள் 24 மணி, 7 நாள், 90 நாள் போன்ற கால அளவுகளில் தானாக மறைந்து விடும். ஆனால், அந்த வசதி முழு உரையாடலுக்கும் பொருந்தும்.

ஆனால் விரைவில் அறிமுகமாக உள்ள இந்த புதிய அப்டேட் மூலம், தனிப்பட்ட மெசேஜ்களை தேர்வு செய்து அனுப்ப முடியும் என்பதால் பயனர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. இந்த அம்சம் குறுகிய நேர தனியுரிமை பாதுகாப்பை வழங்கும் என கூறப்படுகிறது.

பாஸ்வேர்டு, ஓடிபி போன்ற தகவல்களை பகிரும் போது இந்த வசதி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் பயனர்கள் கருதுகின்றனர். எனினும், இந்த அப்டேட் எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்பது இதுவரை அறிவிக்கப்படவில்லை. மேலும், வாட்ஸ் ஆப்பில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை ஒருமுறை மட்டுமே பார்க்க முடியும் 'View Once' என்ற வசதியும் ஏற்கனவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# "சட்ட மாணவர்கள் எளிய மக்களின் நலனில் கவனம் செலுத்த வேண்டும்"

**மேலக்கோட்டையூர், மார்ச் 24:**

வண்டலூர் அருகே மேலக்கோட்டையூரில் உள்ள விஐடி சென்னையில், தமிழ்நாடு சட்டக் கல்லூரி மாணவர்கள் கூட்டமைப்பு இணைந்து 'நீதிக்களம்' என்ற 2 நாள் தேசிய அளவிலான கருத்தரங்கத்தை நடத்தின.

'வளர்ச்சியடைந்த இந்தியாவில் சட்டத் துறையின் பங்களிப்பு' என்ற தலைப்பில் நடந்த இந்த கருத்தரங்கில் தமிழகம் முழுவதிலுமிருந்து 700-க்கும் மேற்பட்ட சட்டக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். கருத்தரங்கின் நிறைவு விழா நேற்று நடந்தது. விழாவில் விஐடி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழக ஆளுநர் (பொறுப்பு) ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பேசும்போது, "இந்தியாவில் 5 கோடிக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதற்கு முக்கியக் காரணம், நம் நாட்டில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதுதான்.




குறைவான மக்களே நீதித்துறையை அணுகி நீதியை பெறக் கூடிய நிலை உள்ளது. கல்வித் துறை சார்ந்த வழக்குகளும் நிலுவையில் இருந்து வருகின்றன. நீதிமன்றங்களில் மக்கள் தங்களுக்கு உண்மையான நீதி கிடைக்கும் என நீதிமன்றங்களை நாடுகின்றனர்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை அடைய நீதித் துறை வளர வேண்டும். பொருளாதார வளர்ச்சி மட்டுமே நாட்டின் வளர்ச்சி ஆகாது.

நாட்டில் உள்ள அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்தால்தான் உண்மையான வளர்ச்சியடைந்த தேசத்தை உருவாக்க முடியும். இளைஞர்கள் ஒழுக்க நெறிகளை பின்பற்ற வேண்டும்.

மனிதநேயமற்ற சமூகம் முன்னேறிய சமூகமாக கருதப்படாது. அதனால், மாணவர்கள் மனித நேயத்துடன் செயல்பட்டு எளிய மக்களின் நலனில் கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.





கருடவாகனம், கஜலக்ஷ்மி வாகனம்



பங்குனி பிராமோட்சவ நாள் 01, மாலை. கருடவாகனம், கஜலக்ஷ்மி வாகனம் – வணமாமலை

# காப்புக்கட்டு



ராமநாதபுரம் வழிவிடு முருகன் ஆலயத்தில் நேற்று காப்புக்கட்டு நடந்தது.

மானாமதுரை அருகே

# கட்டிக்குளம் அழகிய நாயகி அம்மன் கோவில் திருவிழா





**மானாமதுரை, மார்ச் 24:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் சூட்டுக் கோல் ராமலிங்க சுவாமி கோவில் பங்குனி உற்சவ திருவிழா தொடங்குவதை முன்னிட்டு கடந்த அழகிய நாயகி அம்மன் திருவிழா கொடியேற்றத்து டன் தொடங்கியது.


இதில் முக்கிய நிகழ்ச்சி யான அழகிய நாயகி அம்மன் சிம்ம வாகனத்தில் ஆண்டுக்கு ஒரு முறை இங்கு உள்ள மகா சித்தர் சூட்டுக் கோல் ராமலிங்கசுவாமி கோவிலில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி தரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கருப்பனேந்தல் மடம் சார்பில் நடைபெற்ற இவ் விழாவில் இரவில் அழகிய நாயகி அம்மன் சிம் வாகனத்தில் அம்மன் வீதி உலா வரும் நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

அதைதொடர்ந்து சூட்டுக்கோல்ராமலிங்க சுவாமி கோவில் கொடி யேற்றம் நேற்று மாலைதொடங்கியது .தொடர்ந்து திருவிழா வரும் ஏப்ரல் 3 ந்தேதி வரை நடைபெறுகிறது. இதில் தேரோட்டம் வருகிற ஏப்ரல் 1-ந் தேதி புதன்கிழமை மாலை நடைபெறுகிறது. முக்கிய நிகழ்ச்சியாக குதிரை வாகனத்தில் ராம லிங்க சுவாமி எழுந்தருளி முத்தனேந்தலில் உள்ள வைகை ஆற்றில் நீராடி பக்தர்களுக்கு காட்சி தரும் நிகழ்ச்சி ஏப்ரல் 2-ந்தேதி (வியாழன் ) மாலை நடைபெறு கிறது. அதிகாலை வைகை ஆற்றில் தீர்த்தவாரி நிகழ்ச்சியுடன் திருவிழா நிறைவடைகிறது.

# மானாமதுரை மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் யாகம்சாலை பூஜை தொடங்கியது





**மானாமதுரை, மார்ச் 24:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மாரியம் மன் கோவில் தெருவில் உள்ள பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் உள்ளது.

இக்கோவில் சமயபுரம் மாரியம்மன் சேந்தாகுடிமழை மாரியம்மன் பிடிமண் கோவிலாகும். இக் கோவில் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேக விழா விற்காக காலை கணபதி ஹோமமும் அதனைத் தொடர்ந்து மாலை யாகசாலை பூஜை களும் தொடங்கியது. நான்கு கால யாகசாலை பூஜைகள் முடிவு பெற்று நாளை புதன்கிழமை காலை 9:30 மணியிலிருந்து 10:30 மணிக்குள் கும்பாபிஷே கம் நடைபெறுகிறது .

இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு அபிஷேக, ஆராதனை, பூஜை நடை பெற உள்ளது. விழா ஏற் பாடுகளை விழா கமிட்டி யினர் திருக்கோவில் பரம்பரை டிரஸ்டி விஜிபோஸ் விழா குழுவினர் மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

# செங்கரைப்பாளையத் திலிருந்து பூந்துறைக்கு முளைப்பாரி



**ஈரோடு, மார்ச் 24:**


ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், பூந்துறையில் 25.03.2026 புதன்கிழமை நடைபெறும் மூன்று கோயில்களின் கும்பாபிஷேகங்களை முன்னிட்டு செங்கரை பாளையம் பொதுமக்கள் ஸ்ரீ மாகாளியம்மன் கோவிலில் முளைப்பாரி போட்டு வைத்தனர்.

எட்டு நாட்கள் கழிந்த பிறகு நன்கு வளர்ந்த முளைப்பாரிகளை ஆர்வத்துடனும் உற்சாகத் துடனும் பூந்துறை ஈஸ்வரன் கோவில் அங்காளம்மன் கோவில் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு எடுத்துச் செல்லும் செங்கரைப்பாளையம் பொதுமக்கள்.

நன்றி! வணக்கம்!

வாழ்க வளமுடன்

# சென்னை விமான நிலையத்தில் ஒருங்கிணைந்த 2-வது முனையத்தை டிசம்பர் மாதத்திற்குள் திறக்க முடிவு



**ஆலந்தூர், மார்ச் 24:**

சென்னை விமான நிலையத்தின் ஒருங்கிணைந்த சர்வதேச முனைய விரிவாக்க பணிகள் ரூ.2467 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. இதில் முதல் கட்ட முனைய பணிகள் முடிக்கப்பட்டு கடந்த 2023-ல் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து சென்னை விமான நிலையத்தின் சர்வதேச முனையத்தின் 2-ம் கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த பணிகளை இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் மேற்கு ஆசியாவில் நிலவும் பதட்டத்தால் ஸ்டீல் உட்பட ஒரு சில பொருள்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பணிகள் முடிவதில் தாமதம் ஏற்பட்டு உள்ளது.

தற்போது வரை 40 சதவீத கட்டுமான பணிகள் முடிந்து உள்ளன. இப்போது சர்வதேச முனையத்தின் முன்பக்கம் பகுதியில் பணிகள் மேற்கொள்ள இரும்பு தடுப்புகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக வருகை மற்றும் புறப்பாடு முனையத்திற்கு இடையிலான வாகன போக்குவரத்து மாற்றப்பட்டுள்ளது. இந்த பகுதியில் பணிகள் முடிந்ததும் உட்புற வேலைகள் தொடங்கப்படும் என்று கூறப்படுகிறது. இதையடுத்து 2-ம் கட்ட சர்வதேச முனைய பணி முழுவதும் வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் முடித்து திறக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறும்போது, ஒருங்கிணைந்த முனையத்தில் 2-ம் கட்ட விரிவாக்க பணிகள் முடிந்து பயன்பாட்டுக்கு வந்தால் பயணிகளை கையாளும் திறன் அதிகரிக்கும். ஆண்டுக்கு 3.5 கோடி பயணிகளை கையாள முடியும். தற்போது சென்னை விமான நிலைய சர்வதேச முனையங்களில் 'கோட் இ' ரக விமானங்கள் வரை கையாளும் வசதி உள்ளது. இந்த 2-ம் கட்ட பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டால் பெரிய இறக்கை கொண்ட 'கோட் எப்' ரக விமானங்களையும் கையாள முடியும். இதனால் பெங்களூரு மற்றும் ஐதராபாத் விமான நிலையங்கள் போல சென்னைக்கும் அதிக விமான நிறுவனங்களை ஈர்க்க உதவும். தற்போது சர்வதேச முனையத்தில் 120 செக் இன்கவுண்டர்கள் உள்ளது. 2-ம் கட்ட பணிகள் முடிந்து திறக்கப்பட்டால் புதிதாக 72 செக் இன்கவுண்டர்கள் திறக்கப்படும். இதனால் பயணிகள் விரைவாக பாதுகாப்பு சோதனை உட்பட அனைத்து சோதனைகளையும் முடித்து செல்ல முடியும் என்றனர்.

# பாவலர் கருமலைத்தமிழாழனுக்கு வெண்பா வேந்தர் விருது



உரத்தை சிந்தனை அமைப்பு இவ்வாண்டில் சிறந்த வேண்பா எழுதியமைக்காக வெண்பா வேந்தர் விருது மற்றும் பொற்கிழியைப் பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களுக்கு அமைப்பின் தலைவர் உதயம்ராம் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

# 2026: சட்டமன்ற தேர்தல் – காங்கிரஸ் வேட்பாளர் தேர்வுக்குழு கூட்டம் தொடங்கியது



**சென்னை, மார்ச் 24:**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வபெருந்தகை முன்னிலையில் சத்தீஸ்கர் மாநில முன்னாள் துணை முதலமைச்சரும் சட்டமன்றத் தேர்தல் வேட்பாளர் தேர்வு குழு தலைவருமான டி.எஸ். சிங் தியோ தலைமையில் நடைபெற்று வரும் இந்த கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜி.சி சந்திரசேகர், அனில்குமார் யாதவ் மற்றும் தமிழக காங்கிரஸ் பொறுப்பாளரும் தேசிய செயலாளருமான நிவேதித் ஆல்வா, சட்டமன்ற கட்சி தலைவர் ராஜேஷ்குமார், முன்னாள் மாநில தலைவர்கள் கே. எஸ். அழகிரி, கே.வி. தங்கபாலு, கிருஷ்ணசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜய்வசந்த், கார்த்திக் சிதம்பரம், மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தேசிய செயலாளர்கள் மயூரா ஜெயக்குமார், விஸ்வநாதன், அறிவழகன், கோபிநாத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதர்சனம் நாச்சியப்பன், ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் இந்த ஆலோசனையில் கலந்து கொண்டனர்.

# ஏப்ரல் 16-ந் தேதியுடன் தேர்வுகள் முடிகிறது..! ஜூன் 4-ம் தேதி பள்ளிகள் திறக்க முடிவு



**சென்னை, மார்ச் 24:**

10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவ மாணவிகள் பொதுத் தேர்வு எழுதி வருகிறார்கள். பிளஸ் 2 தேர்வு 26-ந் தேதியுடன் முடிகிறது. எஸ்எஸ்எல்சி தேர்வு ஏப்ரல் மாதம் 6-ந் தேதி நிறைவடைகிறது.

சுமார் 17 லட்சம் மாணவ மாணவிகள் பொது தேர்வினை எழுதி முடிக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து 1-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு ஆண்டு இறுதித் தேர்வு நடைபெறுகிறது.

அரசு, உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளி களில் 1 முதல் 5 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஏப்ரல் 6-ந் தேதி ஆண்டு இறுதித் தேர்வு தொடங்கி 16-ந் தேதி நிறைவடைகிறது.

அதேபோல 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஏப்ரல் 1-ந் தேதி தொடங்கி 16-ந் தேதி தேர்வுகள் முடிகின்றன.

ஏப்ரல் 17-ந் தேதி முதல் அனைத்து பள்ளி மாணவர் களுக்கும் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது. ஏப்ரல் 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெறுவதால் அதற்கு முன்னதாக மாணவர்களுக்கு தேர்வுகளை நடத்தி விடுமுறை விடப்படுகிறது.

பள்ளிக்கூடங்கள், வாக்குச்சாவடி மையங்களாக மாற்றப்படுவதால் அதற்கான பணிகளை செய்ய வேண்டியுள்ளது. தேர்தல் பணிகள் நடைபெற இருப்பதால் பள்ளி மாணவர்களுக்கு முன்கூட்டியே விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் கோடை விடுமுறை மாணவர்களுக்கு 48 நாட்கள் கிடைக்கிறது. ஏப்ரல் மாதத்தில் 14 நாட்களும், மே மாதம் முழுவதும், 31 நாட்கள் மற்றும் ஜூன் மாதம் 3 நாட்கள் என மொத்தம் 48 நாட்கள் விடுமுறை கிடைப்பதால் மாணவர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

பொதுவாக ஜூன் 1-ந் தேதி பள்ளிகள் மீண்டும் திறப்பது வழக்கம். ஆனால் அன்று வெள்ளிக்கிழமை வருவ தால் ஜூன் 4-ந் தேதி கோடை விடுமுறைக்கு பிறகு பள்ளிகள் திறப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தால் பள்ளிகள் திறப்பதில் தாமதம் ஏற்படக்கூடும் என்று பள்ளிக் கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அ.தி.மு.க கூட்டணியில் இறுதியானது தொகுதி பங்கீடு: பா.ஜ.க- 27, பா.ம.க 18, அ.ம.மு.க- 11



**சென்னை, மார்ச் 24:**

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை வீழ்த்தி ஆட்சியை பிடிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க., அன்புமணி தலைமையிலான பா.ம.க., டி.டி.வி.தினகரனின் அ.ம.மு.க. ஆகிய கட்சிகளுக்கான தொகுதிகளை இறுதி செய்வது தொடர்பாக பியூஷ் கோயல் நேற்று சென்னை வந்தடைந்தார்.

இந்நலையில், அதிமுக தலைமை அலுவலகத்திற்கு என்டிஏ கூட்டணி கட்சி தலைவர்கள் வருகை தந்துள்ள நிலையில், தொகுதிகள் ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாமகவுக்கு 18 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் 3 தொகுதிகளில் போட்டி – தொகுதி பங்கீடு குறித்து பேசிய பிரேமலதா

**சென்னை, மார்ச் 24:**

சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் நிர்வாகிகளுடன் பொதுச்செயலாளர் பிரேமலதா ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் கூட்டணியில் தே.மு.தி.க.வுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள், வெற்றிவாய்ப்புள்ள தொகுதிகள் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதன்பின் செய்தியாளர்கள் சந்திப்பில் பிரேமலதா கூறியதாவது:-

* தொண்டர்கள் விருப்பத்திற்கு ஏற்ப தே.மு.தி.க. கூட்டணி அமைத்துள்ளது. மகத்தான வெற்றி கிடைக்கும்.

* தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்கு எங்களை அழைக்கவில்லை என்பது கற்பனை செய்தி.

* தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பாக ஓரிரு நாட்களில் தே.மு.தி.க.வை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

* தொகுதிகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை அறிவிப்பு வெளியாகும்.

* புதுச்சேரியில் 3 தொகுதிகளில் தே.மு.தி.க. போட்டியிடுகிறது. பிற்பகல் 3 மணிக்குள் வேட்புமனு தாக்கல் செய்வார்கள் என்றார்.

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

## ADVERTISE WITH US

CONTACT US 9438610756

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

## சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை

- ✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
- ✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
- ✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
- ✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

## Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

♦ Flexible timing unlimited incentive

♦ No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

## Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

## ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER

ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_

8939228901

## WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## SADHANA DEVI.K — CAR WASH SUPREME

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

www.arultharumdeivam.com

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!





உதடுகள் நெருங்கும் முன் கூட
உடல் உணர்வை
அறிந்துகொள்கிறது

விரல்கள் தேகத்தில்
செல்லும் பாதை
இரவின் ரகசிய மொழி

இதயம் அமைதியாக
தங்கும் இடமே

காதலின் உண்மை
அர்த்தம்

காதல் மனிதரை மாற்றாது
அவரின் உள்ளத்தை
வெளிச்சமாக்கும்

இதயம் மெதுவாக
நம்பும் உணர்வே
காதலின் முதல்
அடையாளம்

# வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கையில் நம்பிக்கை
இருக்கணும் ஆனால்
பிறரை நம்பித்தான்
இருக்கக்கூடாது

கடந்து போக கற்றுக்
கொள் மாயமான இவ்வுலகில்
காயங்களுக்கும் நியாயங்கள்
தேடிக் கொண்டிருந்தால்
நிம்மதி இருக்காது

சகித்துக்கொண்டு
வாழ்வதல்ல வாழ்க்கை
சலிக்காமல்
வாழ்வதே வாழ்க்கை

# "நம்பிக்கையே பிரார்த்தனை"



புது பிசினஸ் துவங்க லோகுவிற்கு பேங்க் லோன் சாங்ஷன் ஆனதும் சந்தோஷம் பொங்கியது... கூடவே ஒரு நெருடலும் இருந்தது. "என்னால் இந்த புது பிசினஸ்ல ஜெயிக்க முடியுமா?"

ஆரம்பத்தில் சன்னமாய் இருந்த சந்தேகம் நாளாக நாளாக பெரிதாய் வளர்ந்து நின்றது. ஆனாலும் லோகு புதுக் கடையைத் திறந்தான்.

ஒவ்வொரு வாடிக்கையாளரும் உள்ளே வரும் போது அவன் மனதில் சந்தேகம் ஓங்கும், "இவங்க வாங்குவாங்களா?"

அந்த சந்தேகம் அவன் நடவடிக்கையை மாற்றும். வாடிக்கையாளர்கள் போய் விடுவார்கள்.

அடுத்த நாள் முதல் லோகு ஒரு புதிய பழக்கத்தை ஆரம்பித்தான். காலையில் கடை திறக்கும் முன் கோவிலுக்கு போவது.

"கடவுளே... எனக்கு லாபம் கொடு"
"என் பிசினஸ் நல்லா போகணும்..."
தினமும் வேண்டிக் கொள்வான்.

அப்போது ஆண்டவன் மீதும் சந்தேகம் தோன்றும். 'நமக்கெல்லாம் ஆண்டவன் நல்லது செய்வானா?"

ஒரு வருடம் கழித்து, கணக்குப் புத்தகத்தைத் திறந்தான்.

நஷ்டம்.

மனம் உடைந்த லோகு, அன்று மாலையே கோவிலுக்குப் போனான். "கடவுளே... தினமும் உன்னை நம்பி வந்து... கும்பிட்ட என்னை இப்படி ஏமாத்திட்டியே!"

அதைக் கேட்டு அங்கிருந்த ஒரு வயதான சாமியார் சிரித்தார்.

"நீ கடவுளை நம்பினாயா... இல்ல உன் சந்தேகத்தை நம்பினாயா?"

லோகு குழம்பினான்.

சாமியார் சொன்னார், "நீ ஒவ்வொரு நாளும் சாமி கிட்ட வேண்டும் போதும் உன் மனசு என்ன சொல்லும்?... நமக்கெங்கே நல்லது நடக்கப் போகுது?"ன்னு தானே நினைக்கும்?..."

சாமியார் சிரித்தார். "அதான் நடந்துச்சு... நீ நம்பினதுதான் நடந்துச்சு."

லோகுவின் கண்கள் விரிந்தது.

"தம்பி... கடவுள் உன் முன் நின்றாலும்... உன் மனசு 'நடக்காது'ன்னே நெனச்சிட்டிருந்தா அந்தக் கடவுளால் கூட உன்னை ஜெயிக்க வைக்க முடியாது."

லோகு தெளிந்தான். தான் கடவுளை நம்பி கோவிலுக்குத் தினமும் போனோம்... ஆனா ஒரு நாளும் என்னை நான் நம்பலை.!"

அடுத்த நாள்.. லோகு கோவிலுக்குப் போகவில்லை. நேரே கடையைத் திறந்தான். இன்று அவன் முகத்தில் ஒரு புதிதாய்த் தன்னம்பிக்கை வந்திருந்தது. "என் மீது எனக்கு நம்பிக்கை இல்லாவிடில்... கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை."


உண்மை புரிந்திருந்தது

(முற்றும்)



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*14. எல்லா ஆவியையும் பிடிக்கலாம் ஆனால் ஒரே ஒரு ஆவியை மட்டும் பிடிக்க முடியாது அது என்ன..?*

*விடை: கொட்டாவி.*

*15. உலகத்துலயே எந்த நரி பெரிய நரி..?*

*விடை: DICTIONARY.*



# தினம் ஒரு சமையல்



## புளிச்சக்கீரை கடையல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| புளிச்ச கீரை | -1 கட்டு |
| வெங்காயம் | -2 |
| தக்காளி | -1 |
| வரமிளகாய் | -3 |
| வரக்கொத்தமல்லி | -1 ஸ்பூன் |
| கடுகு | -1/2 ஸ்பூன் |
| பெருங்காயம் | |
| உப்பு | -தேவைக்கு ஏற்ப |
| பூண்டு | -3 பல் |
| மிளகாய் | -2 பச்சை |

**செய்முறை:**



புளிச்சக் கீரையை நன்றாக ஆய்ந்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் தலையை மட்டும் தான் போட வேண்டும் தண்டு போடக்கூடாது

வெங்காயம் தக்காளி பூண்டு இரண்டு பச்சை மிளகாய் அனைத்தையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் பிறகு வாணலி வைத்து வர கொத்தமல்லியும் வரமிளகாயும் நன்கு வதக்கவும்

வரமிளகாயும் வரக்கொத்தளையும் வதக்கியதை எடுத்து மிக்ஸியில் முதலில் அரைத்து கொள்ளவும் பிறகு வதக்கிய வெங்காயம் தக்காளி பூண்டு பச்சை மிளகாயுடன் புளிச்சக்கீரையை போட்டு உப்பு போட்டு நன்றாக வதக்கி வேக வைக்கவும்

வெந்த கீரையை நன்றாக கடையவும் அதன் மேல் வரமிளகாய் வரக்கொத்தமல்லி அரைத்ததையும் எடுத்து போட்டு நன்றாக கடையவும். பிறகு மேலே கடுகு பெருங்காயம் தாளித்து கொட்டவும்

# விழுதி பயன்கள்



விழுதி மரங்கள் விளச்சி மரம் என்றழைக்கப்படுகிறது. இது வெப்ப மண்டலத்தில் வாழும் மரங்கள். இதன் இலைகள் தனித்தனியாக இருக்கும். பூக்கள் வெண்ணிறமாக இருக்கும். பழங்கள் சிவப்பு நிறத்தில் இருக்கும். சிறு செடி போன்று இருக்கும். இதன் பழங்கள் சுவையானது. நறுமணம் மிக்கது. நறுமணத்துக்காகவே பல இடங்களில் இது வளர்க்கப்படுகின்றன.

கருமுட்டைகளை அதிகரிக்கும்

குழந்தையின்மை பிரச்சனையை அதிகமாக எதிர்கொள்ளும் காலத்தில் இருக்கிறோம். பெண்கள் குழந்தையின்மை பிரச்சனையை எதிர்கொள்ள பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று கருமுட்டை உருவாக்கம் குறைவாகவோ அல்லது ஆரோக்கியமில்லாமலோ இருப்பது. பெண்கள் கருமுட்டை பிரச்சனை எதிர்கொண்டால் அவர்கள் விழுதி இலை கஷாயம் குடிப்பதன் மூலம் பலன் பெற முடியும்.

விழுதி இலையை எடுத்து நன்றாக அலசி சாறெடுத்து சம அளவு நல்லெண்ணெய் சேர்த்து 21 நாட்கள் வீதம் குடித்து வந்தால் கருமுட்டைகள் உருவாக்கம் அதிகரிக்கும். கருமுட்டை ஆரோக்கியமாக இருக்கும். குழந்தைப்பேறு விரைவில் நடக்கும். பெண்களுக்கு வெள்ளை வேட்டை பிரச்சனையும் நீங்க கூடும்.

மூட்டு வலி என்றால் எலும்பு தேய்மானம் மட்டும் அல்ல, மூட்டுகளில் வாய்வு நீர் சேர்வதும் கூட மூட்டு வலிக்கு காரணமாகலாம். இந்த மூட்டுகளில் இருக்கும் நீர் வெளியேறினாலே மூட்டு வலி பாரம் குறையக்கூடும். அதற்கு இந்த விழுதி இலை சேர்க்கலாம். இதை சூப் போன்று செய்து குடிப்பதன் மூலம் பலன் கிடைக்கும்.

விழுதி இலைகளை கைப்பிடியளவு எடுத்து இடித்து சிறிது மிளகை சேர்த்து தூளாக்கி விடவும். பிறகு சீரகம், பூண்டு சேர்த்து சிறிது விளக்கெண்ணெயில் தாளித்து அரைத்த விழுது சேர்த்து, கொதிக்கவிட்டு இறக்கி கொத்துமல்லி தழை, உப்பு சேர்க்கவும். ரசம் போல் செய்து சாதத்தில் அல்லது அப்படியே சூப் ஆக்கி குடித்து வரவேண்டும்.

# விஜய்யே என்னை அழைத்து பாட சொன்னாலும் நான் அவருக்கு பாட மாட்டேன்... பிக்பாஸ் கானா வினோத்



தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு தனி இடம் பிடிக்க கடுமையாக போராட்டத்தை தாண்டி வெற்றிப் பெற்றவர் தான் நடிகர் விஜய். அப்பாவின் உதவியுடன் சினிமாவில் என்ட்ரி கொடுத்தாலும் அவரது கடின உழைப்பு பெரிய பங்கு வகித்துள்ளது.

கோடான கோடி மக்களின் நெஞ்சில் குடியிருக்கும் நடிகர் விஜய் இப்போது தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவராக அரசியலில் களமிறங்கியுள்ளார்.

கடந்த சில வருடங்களாகவே அரசியல் வேலைகளில் தான் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

சமீபத்தில் நடிகர் விஜய் மும்பையில் அட்லீ-ப்ரியாவின் வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். அப்போது எடுக்கப்பட்ட வீடியோக்கள் சமூக வலைதளங்களில் அதிகம் வலம் வந்தது.

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர் தான் கானா வினோத். 9வது சீசனின் டைட்டிலை வென்றிருக்க வேண்டும் ஆனால் இடையில் ரூ. 18 லட்சத்தை எடுத்துக்கொண்டு நிகழ்ச்சியில் இருந்து வெளியேறினார்.

இவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் பேசும்போது, விஜய் சாரே அழைத்து அவர் கட்சிக்கு ஒரு அரசியல் பாட்டு பாட சொன்னால் நான் பாட மாட்டேன்.

நான் பொதுவான ஒரு ஆள், அவர் கட்சிக்காக நான் பாடினால் அது தனிப்பட்ட விஷயமாகிவிடும். இதுவே நான் அவர் படத்தில் பாட சொன்னால் பாடுவேன், கட்சிக்காக பாட மாட்டேன் என்று கூறியுள்ளார்.



**சினிமா**

மிருனாள் தாகூர் அவ்வப்போது மிகவும் கவர்ச்சியாக வெளியிடும் புகைப்படங்கள் தொடர்ந்து இணையத்தில் வைரல் ஆகின்றன.

தற்போது மிருனாள் மிகவும் ட்ரெண்டியான உடையில் கிளாமர் போஸ் கொடுத்துள்ள ஸ்டில்களை பாருங்க.

# நடிகர் மாதவனின் மொத்த சொத்து மதிப்பு இத்தனை கோடியா?



நடிகர் மாதவன் கெரியரின் ஆரம்பகட்டத்தில் தமிழில் தான் அதிக படங்கள் நடித்துள்ளார். அலைபாயுதே, மின்னலே, ரன் என பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

அதன் பிறகு ஹிந்தியில் நடிக்க தொடங்கிய அவர் தற்போது பாலிவுட்டில் முன்னணி நடிகராக இருக்கிறார். சமீபத்தில் ரிலீஸ் ஆகி வசூலை குவித்து வரும் துரந்தர் 2 படத்திலும் அவர் நடித்துள்ளார்.

நடிகர் மாதவனின் சொத்து மதிப்பு சுமார் 125 கோடி ரூபாய் ஆகும். அவர் இந்தியா மட்டுமின்றி துபாயில் வீடு, சொகுசு கப்பல் போன்றவற்றை வைத்திருக்கிறார்.

அது பற்றி பேசிய மாதவன் தான் ஆரம்ப கட்ட கெரியரில் சம்பாதித்த அனைத்தையும் ரியல் எஸ்டேட்டில் தான் முதலீடு செய்தேன், அது தான் மிடில் கிளாஸ் மனநிலை. தற்போது அது தான் தனக்கு உதவி இருக்கிறது எனவும் கூறியுள்ளார்.

# தெய்வங்களும்.. வழிபாட்டு தினங்களும்.

* ஞாயிறு: கண்ணுக்குத் தென்படும் கடவுளான சூரியனை வணங்க ஏதுவான நாள். 'ஆதித்ய ஹிருதயம்' என்ற சுலோகத்தைச் சொல்லி வணங்க வேண்டும்.

* திங்கள்: சிவாலய தரிசனம் நன்மை தரும். தேவாரம், திருவாசகம், அபிராமி அந்தாதி பாடல்களைக் கொண்டு அம்பிகையையும், சிவபெருமானையும் வழிபடுவது நல்லது.

* செவ்வாய்: முருகப்பெருமான் ஆலயத்திற்குச் சென்று, ஆறு விளக்குகள் ஏற்றி வழிபடுவதால் நினைத்தது நடக்கும். எதிரிகள் காணாமல் போவார்கள். கந்தசஷ்டி கவசம் படிப்பதும் நன்மை தரும்.

* புதன்: பெருமாளை சேவிப்பதற்கு ஏற்ற தினம். துளசி மாடத்திற்கு பூஜை செய்ய உகந்த



நாள். விஷ்ணு சஹஸ்ரநாமம், நாலாயிர திவ்யபிரபந்தம் ஆகிய பாடல்களைப் பாராயணம் செய்தால் வாழ்வில் வளம் சேரும்.

* வியாழன்: நாம் குருவாக எண்ணும் மகான்களைப் போற்றுவதற்கு உகந்த நாள். சாயிபாபா, ராகவேந்திரர், ராமானுஜர், காஞ்சி பெரியவர் போன்ற மகான்களை ஆராதனை செய்யலாம். பகவத்கீதையைப் பொருள் புரிந்து படிப்பது நலன்களைப் பெற்றுத்தரும்.

* வெள்ளி: மகாலட்சுமி வழிபாடு நன்மைதரும். கோ-பூஜை செய்வது, பஞ்சமுக குத்துவிளக்கை ஏற்றி வைத்து பூஜிப்பது மிகவும் விசேஷம். அம்பிகையின் ஆலயங்களை தரிசிப்பது நன்மை தரும். மகாலட்சுமி ஸ்தோத்ரம், மகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம், அன்னபூர்ணா அஷ்டகம் ஆகியவற்றைப் படிப்பதும் நல்லது.

* சனி: ஆஞ்சநேயர், கருடாழ்வார், நந்திகேஸ்வரர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் என இறைவனுக்குத் தொண்டு செய்து இறைநிலை அடைந்த அடியவர்களை வணங்குவதற்கு சிறப்பான நாள். ராமாயணம், மகாபாரதம், சுந்தரகாண்டம், பெரியபுராணம் முதலான நூல்களைப் படித்தறியவும் இது ஏற்ற தினங்கள் ஆகும்.

*

விநாயகப்பெருமானை எல்லா நாட்களிலும், எல்லா நேரத்திலும் வணங்கலாம். நினைத்தவுடன் நம் மனக்கண் முன் தோன்றுபவர் விநாயகர்

**எம்.அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி-620015

## தினம் ஒரு தலைவர்கள்

# ஷஹீத் சிவராம் ராஜகுரு வரலாறு

ராஜ்குரு 1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள கேத் என்ற இடத்தில், பூனாவிற்கு அருகிலுள்ள பீமா நதிக்கரையில் பிறந்தார். அவர் தேசஸ்தா பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவரது தாயார் பெயர் ஸ்ரீமதி பார்வதி தேவி மற்றும் அவரது தந்தையின் பெயர் ஸ்ரீ. ஹரிநாரைன் ராஜ்குரு. அவரது முழுப் பெயர் 'ஹரி சிவராம் ராஜ்குரு' அல்லது 'சிவ்ராம் ஹரி ராஜ்குரு'. ஒவ்வொரு ஆகஸ்ட் 24 ஆம் தேதியும், ராஜ்குரு பிறந்தநாளில், சஹீத் ராஜ்குருவின் துணிச்சலான செயல் மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. ராஜ்குருவின் பிறந்த நாள் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.

சஹீத் சிவராம் ராஜகுரு மற்றும் அவரது வாழ்க்கை பற்றிய உண்மைகள் 1914 ஆம் ஆண்டு, அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவரது தந்தை இறந்தார். அவரது குடும்பப் பொறுப்பு அவரது சகோதரரின் தோள்களில் விழுந்தது. அவரது சகோதரர் தின்கர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனது தாய்க்கும் சகோதரருக்கும் உணவளித்தார். அவர் உள்ளூரில் கெட் நகரில் தொடக்கக் கல்வியைப் பெற்றார், பின்னர் புனேவில் (பூனா) உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அவரது தந்தை இறந்தபோது அவரது சகோதரர் அவரைக் கவனித்துக் கொண்டார், மேலும் அவரது குடும்பத்தினர் சிவராம் ராஜ்குருவைப் பற்றி சில கனவுகளைக் கொண்டிருந்தனர், ஆனால் விதி பின்னர் மாறியது. அவர் சிறு வயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார், மேலும் இளம் வயதிலேயே சேவா தளத்திலும் சேர்ந்தார். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் சிவராம் ராஜ்குருவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய கதாபாத்திரம், ஏனெனில் அவர்தான் ராஜ்குரு அணுகிய முதல் மனிதர். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் நடத்திய பல பயிற்சி முகாம்களிலும் அவர் கலந்து கொண்டார். சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது வழக்கம், மேலும் லோக்மான்ய திலகரின் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

15 வயதில், அவர் வாரணாசிக்கு நடந்து சென்று ஒரு சமஸ்கிருதப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வாரணாசியை அடைய ஆறு நாட்கள் ஆனது என்று கூறப்படுகிறது. அந்தப் பள்ளியில், அவரைப் போன்ற புரட்சியாளர்களான சில புதிய நண்பர்களை அவர் உருவாக்கினார். படிப்படியாக அவரது நோக்கம் தெளிவாகியது. பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளை வீழ்த்துவதே அவரது ஒரே குறிக்கோள். அவர் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இந்தியாவுக்கு எந்த வகையிலும் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது கனவை நனவாக்க, அவர் இந்துஸ்தான் சோசலிச குடியரசு இராணுவத்தில் சேர்ந்தார். பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். சுதந்திரம் பற்றிய ஒரே கருத்தை அவர்கள் தங்கள் இதயங்களிலும் மனங்களிலும் பகிர்ந்து கொண்டதால் அவர்களின் நட்பு மிகவும் வலுவாக வளர்ந்தது.

சைமன் கமிஷனும் அதன் பின்விளைவுகளும் ஆங்கிலேயர்களால் ஒரு புதிய காப்பக ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியர்கள் இந்த புதிய சீர்திருத்தத்தை திருத்துமாறு கோரினர். 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, நாட்டின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், அரசாங்கத் திட்டங்கள் பொதுமக்களை எவ்வாறு சென்றடைகின்றன என்பதை ஆராய்வதற்கும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டது. மேலும் அறிக்கைகளின் அடிப்படையில், புதிய திட்டங்கள் உருவாக்கப்படும், மேலும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்யலாம். இதற்காக, பிரிட்டிஷ்காரர் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஒரு குழுவை அமைத்தார். இந்தக் குழுவிற்கு சர் ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ்காரர் தலைமை தாங்கினார்.

ஏழு எம்.பி.க்கள் கொண்ட ஒருவர் இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறார் என்பதால் இந்திய மக்கள் கோபமடைந்தனர், ஆனால் அந்த ஏழு பேர் கொண்ட குழுவில் ஒரு இந்தியர் கூட இல்லை. 1927 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் பல போராட்டங்களை நடத்தி, சைமன் கமிஷனைப் புறக்கணிக்குமாறு இந்தியர்களிடம் முறையிட்டது, மேலும் அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த லார்ட் பிர்கன்ஹெட்டை சவால் செய்தது. அனைத்து இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குமாறு அவர்கள் செயலாளரிடம் கேட்டுக் கொண்டனர். முகமது அலி ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக்கும் சைமன் கமிஷனைப் புறக்கணிக்க முடிவு செய்தது.



சைமன் கமிஷன் ஜனவரி 1928 இல் இங்கிலாந்தை விட்டு வெளியேறியது, அவர்கள் வந்தவுடன், வழியில் பெரும் போராட்டங்கள் நடந்தன. மக்கள் கமிஷனை கருப்புக் கொடிகளுடன் வரவேற்றனர். இந்தியாவின் கிட்டத்தட்ட அனைத்து முக்கிய நகரங்களிலும் இதேபோன்ற போராட்டங்கள் நடந்தன. அவற்றில் 'சைமன் கமிஷனுக்கு' எதிரான ஒரு போராட்டம் பிரபலமானது அல்லது மிகவும் பிரபலமற்றது. அக்டோபர் 30, 1928 அன்று, கமிஷன் லாகூருக்கு வந்தபோது, அவர்களை கருப்புக் கொடிகளுடன் வரவேற்கத் தயாராக இருந்த போராட்டக்காரர்களை அவர்கள் எதிர்கொண்டனர். அந்த குறிப்பிட்ட போராட்டத்திற்கு இந்திய தேசியவாதியான லாலா லஜ்பத் ராய் தலைமை தாங்கினார். அந்த ஆண்டு பிப்ரவரியில் பஞ்சாப் சட்டமன்றத்தில் இந்த கமிஷனுக்கு எதிராக அவர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் உள்ளூர் போலீசார் போராட்டக்காரர்களை அடிக்கத் தொடங்கினர். அந்த போராட்டத்தில், மற்றவற்றுடன், தலைவராக இருந்த லாலா லஜ்பத் ராய் படுகாயமடைந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் இறந்தார்.

இந்தச் செய்தி இந்தியாவில் காட்டுத்தீ போல பரவியது. மக்கள் ஆத்திரமடைந்தனர். 1928 ஆம் ஆண்டு லாகூரில் பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி ஜே.பி. சாண்டர்ஸைக் கொல்ல பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோருடன் சேர்ந்து ராஜ்குரு ஒரு திட்டத்தை வகுத்தார். லாலா லஜ்பத் ராயின் மரணத்திற்குப் பழிவாங்குவதற்காக. பல இந்தியர்கள் இந்த செயலைப் பாராட்டினர். பல இந்திய குடிமக்கள் இதைக் கண்டித்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் இந்தச் செயலைக் கண்டித்தது. ஆனால் இறுதியில், இது இந்திய மனங்களிலும் இதயங்களிலும் ஒரு புரட்சியைத் தூண்டியது - அவர்களால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறை சுதந்திரப் போராளிகள் புரட்சியை விரைவுபடுத்தினர்.

சிவராம் ராஜகுரு படுகொலைக்குப் பிறகு என்ன நடந்தது? படுகொலைக்குப் பிறகு, ராஜகுரு ஒரு தப்பியோடிய வாழ்க்கை வாழ்ந்தார். அவர் நாக்பூருக்கு ஒளிந்து கொள்ளச் சென்றார். நாக்பூரில் உள்ள ஒரு ஆர்.எஸ்.எஸ் ஊழியரின் வீட்டில் தஞ்சம் புகுந்து கே.பி. ஹெட்கேவரைச் சந்தித்தார். புனேவுக்குத் திரும்பும் வழியில், அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகிய மூன்று பேரும், மேலும் 21 சக சதிகாரர்களும் கைது செய்யப்பட்டு வெளிப்படையாக வடிவமைக்கப்பட்ட ஒரு விதிமுறையின் கீழ் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் இருந்தனர். அவர்களின் கதை இந்திய மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்தது. ராஜகுரு, இரண்டு துணிச்சலான மனிதர்களுடன் சேர்ந்து, 1931 மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டார். பின்னர், அவர்களின் உடல்கள் சட்லஜ் நதிக்கரையில் தகனம் செய்யப்பட்டன. சிவராம் ராஜகுரு தியாகியானபோது அவருக்கு வயது வெறும் 23. அவருக்கு இரும்பு இதயம், அச்சமற்ற மனப்பான்மை மற்றும் தைரியம் இருந்ததாக அவரது நெருங்கிய கூட்டாளிகள் கூறுகிறார்கள். பகத் சிங்கின் கட்சியின் 'துப்பாக்கி ஏந்தியவர்' அவர். இந்த துணிச்சலான செயல்களைக் கேட்டு, நாம் நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும், நாம் சுதந்திரத்திற்கு தகுதியானவர்களா? சிவராம் ராஜகுரு போன்ற பெரிய மனிதர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அதே மக்களால் இந்த சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. வன்முறை, கலவரங்கள், திருட்டுகள் மற்றும் ஊழல்கள் நம் தேசத்தை முடக்கியுள்ளன. அரசியல்வாதிகள், தங்கள் லாபத்திற்காக, நம் மக்களைப் பிரிக்கிறார்கள், மேலும் வாக்களிப்பின் சக்தி என்ன, நமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெறுவதற்கு எவ்வளவு வன்முறை மற்றும் மனித உயிர் செலவாகும் என்பது மக்களுக்கு இன்னும் தெரியாது. ஜனநாயகத்திற்கும் ஒரு விலை உண்டு. மக்களுக்குத் தேவையானது செயல்பாட்டில் பங்கேற்பதுதான். ஜனநாயகம் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு போன்றது. நாம் வாக்களிக்கும்போது நமது வேலை முடிவடைவதில்லை; மாறாக, அது நாம் வாக்களிக்கும்போது தொடங்குகிறது. நாம் அற்பமான தனிப்பட்ட மற்றும் குறுகிய கால ஆதாயங்களுக்காக விழுகிறோம், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூட மாட்டோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரம் ஒரு விலையில் வருகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நீண்ட காலத்திற்கு முன்பு நடப்பட்ட மரங்களின் பழங்களை நாம் அனுபவித்து வருகிறோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தை பயனுள்ளதாக மாற்ற தேசத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

# ஆந்திரம்: கலப்பட பால் விவகாரம் – சிகிச்சை பலனின்றி மேலும் இருவர் உயிரிழப்பு!

**திருப்பதி, மார்ச் 24:**

ஆந்திர பிரதேசத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கலப்படமான பாலைக் குடித்ததால் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களில் மொத்தம் 16 பேர் உயிரிழந்ததாக அம்மாவட்ட மருத்துவ மற்றும் சுகாதார அதிகாரி கே. வெங்கடேஷ்வர ராவ் ஞாயிற்றுக்கிழமை(மார்ச் 22) தெரிவித்தார். மேலும், மூவர் ராஜமகேந்திரவரம் பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜமகேந்திரவரத்தில் வீடுகளுக்கே வந்து பால் விநியோகிக்கும் ஒரே வியாபாரியிடம்தான் பால் வாங்கி அருந்திய குடும்பங்களில் பலருக்கும் கடந்த பிப். 22-இல் உடல்நிலை மிகவும் மோசமாகி அப்பகுதியிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

அந்த வியாபாரி உள்ளூர் கால்நடை விவசாயிகளிடமிருந்தும் பால் கொள்முதல் செய்து வீடுகளுக்கு விநியோகித்து வந்துள்ளார் என்பதும், கலப்பட பாலை குடித்தோரின் சிறுநீரகம் முதலில் செயலிழந்ததும், பிறகு சிறுநீர் தடைபட்டு உயிரிழப்பு ஏற்பட்டதும் முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தசம்பவத்தைதொடர்ந்து, பால் மாதிரியை சேகரித்து, பல்வேறு ஆய்வு கூடங்களுக்கு உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

இதேபோல், பல குழுக்கள் சம்பந்தப்பட்ட இடத்தில் ஆய்வு நடத்தி வருகின்றனர். சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் மருத்துவக் குழுக்கள் ஆய்வு நடத்தி வருகின்றன என்று தெரிவித்தனர்.

# திருப்பதி தேவஸ்தான கோயில்கள் அனைத்தும் அதிநவீன ஆன்மிக மையங்களாக வளர்ச்சி பெற வேண்டும்: சந்திரபாபு நாயுடு உத்தரவு



**திருப்பதி, மார்ச் 24:**

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தனது குடும்பத்தாருடன் திருப்பதி ஏழுமலையானை தரிசித்தார்.

அப்போது அவர் தனது பேரன் நாரா தேவான்ஷின் பிறந்த நாளையொட்டி, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் எஸ்.வி. அன்னதான அறக்கட்டளைக்கு ஒருநாள் அன்னதான செலவான ரூ.44 லட்சத்துக்கான காணிக்கையை வழங்கினார். சுவாமியை தரிசித்த பின்னர் அவருக்கு ரங்கநாயக மண்டபத்தில் அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தனர்.

அதன் பின்னர், சந்திரபாபு நாயுடு, தனது மனைவி புவனேஸ்வரி, மகனும் அமைச்சருமான நாரா லோகேஷ், மருமகள் பிராம்மனி மற்றும் பேரன் நாரா தேவான்ஷ் ஆகியோருடன் இணைந்து தரிகொண்டா வெங்கமாம்பாள் அன்னதான கூடத்திற்கு சென்றார். அங்கு, பக்தர்களுக்கு காலை சிற்றுண்டியை சந்திரபாபு நாயுடு மற்றும் அவரது குடும்பத்தினர் பரிமாரியதுடன், பக்தர்களுடன் இணைந்து உண்டனர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு , திருமலையில் 12 ஆயிரம் சதுர அடியில் ரூ.25 கோடியில் கட்டப்பட்ட அதிநவீன உணவு மற்றும் நீர் பரிசோதன மையத்தை திறந்து வைத்தார். திருமலையில் செயற்கைநுண்ணறிவு கமாண்ட் கண்ட்ரோல் மையத்தை அவர் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் பேசுகையில், “திருமலைக்கு ஏழுமலையானை தரிசிக்க வரும் பக்தர்கள் எதிர் கொள்ளும் சங்கடங்களை முன் கூட்டியே ஏஐ மூலம் கண்டறிந்து உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டும். திருப்பதி தேவஸ்தானத்தின் அனைத்து கோயில்களும் ஒரு அதிநவீன ஆன்மிக மையங்களாக செயல்பட வேண்டும் ” என்றார்.

# ஏழுமலையானுக்கு ரூ. 1 கோடி நன்கொடை!



**திருப்பதி, மார்ச் 24:**

சென்னையைச் சேர்ந்த சுப்பாராவ் அப்பரல்ஸ் நிறுவனம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை திருமலை தேவஸ்தானத்தின் ‘ஸ்ரீ பாலாஜி ஆரோக்கிய வரபிரசாதினி’ திட்டத்துக்கு ரூ. 1 கோடி நன்கொடையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநிலம், சென்னையைச் சேர்ந்த சுப்பாராவ் அப்பரல்ஸ் நிறுவனத்தார் ஜெ. ராஜா ரமேஷ், ஞாயிற்றுக்கிழமை திருமலை தேவஸ்தானத்தின் ‘ஸ்ரீ பாலாஜி ஆரோக்கிய வரபிரசாதினி’திட்டத்துக்கு ரூ.1 கோடி நன்கொடை அளித்தார்.

நன்கொடைக்கான வரைவோலையை திருப்பதியில் உள்ள திருமலை தேவஸ்தானத்தின் கூடுதல் செயல் அலுவலர் சி.எச். வெங்கையா சௌத்ரியிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் திருமலை தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் பானு பிரகாஷ் ரெட்டி கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் நன்கொடையாளருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

# கேரளத்தில் வாக்காளர் பட்டியலில் இணைக்க மார்ச் 15 வரை சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசிலனை!



**புதுடெல்லி, மார்ச் 24:**

வாக்காளர் பதிவு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்களில் கடந்த மார்ச் 15-ஆம் தேதிக்குப்பின் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாநில தலைமை தேர்தல் நடத்தும் அலுவலர் யூ. ரத்தன் கேல்கர் ஞாயிற்றுக்கிழமை() மார்ச் 22 தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் இணைக்க, கேரளத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய வழங்கப்பட்ட கடைசி தேதியான மார்ச் 23 வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதன்பின் நடைபெறும் சரிபார்ப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் கால அவகாசமாக 10 நாள்கள் வரை தேவைப்படும் என்பதால் மேற்கண்ட முடிவை தேர்தல் ஆணையம் எடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், மார்ச் 15 வரை விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் உரிய சரிபார்ப்புக்குப்பின் தகுதியானவர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இணைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள், வரும் பேரவைத் தேர்தலில் வாக்கு செலுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களும் மார்ச் 15க்குபின் விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களும் தேர்தல் நடைமுறைகள் முடிந்த பின்னரே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் இருந்து இந்தியா வந்தது 16,700 மெட்ரிக் டன் எல்பிஜி!


**புதுடெல்லி, மார்ச் 24:**

அமெரிக்காவில் இருந்து 16,714 மெட்ரிக் டன் எல்பிஜி (திரவ பெட்ரோலிய எரிவாயு) பைக்சிஸ் பயோனியர் சரக்கு கப்பலில் இந்தியாவுக்கு வந்தது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி புறப்பட்ட இந்தக் கப்பல், கர்நாடக மாநிலம் நியூ மங்களூரு துறைமுகத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தது. மேற்காசிய போரால் இந்தியாவில் எல்பிஜி விநியோகத்தில் பிரச்னை எழுந்துள்ள நிலையில் அமெரிக்காவில் இருந்து வந்துள்ள எல்பிஜி, பிரச்னைக்கு தீர்வு காண்பதில் முக்கியப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மங்களூரு நகரில் பூமிக்கு அடியில் நாட்டிலேயே மிகப்பெரிய எரிவாயு சேமிப்பு மையம் உள்ளது. கடந்த 2025 செப்டம்பர் முதல் செயல்பட்டுவரும் இந்த மையத்தில் 80,000 மெட்ரிக் டன் அளவுக்கு எரிவாயு சேமிக்க முடியும். கடல்மட்டத்தில் இருந்து 225 மீட்டர் ஆழத்தில் இந்த சேமிப்பு மையம் உள்ளது. முன்னதாக, ரஷியாவில் இருந்து அக்வா டைட்டன் கப்பலில் 7.7 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் மங்களூருக்கு சனிக்கிழமை வந்தடைந்தது. இந்தக் கப்பலில் உள்ள கச்சா எண்ணெய் முதலில் சீனாவுக்கு செல்வதாக இருந்தது. எனினும், இந்தியாவின் தேவையைக் கருத்தில் கொண்டு நமது நாட்டுக்குத் திருப்பிவிடப்பட்டது. மங்களூரில் பெரிய அளவிலான பெட்ரோலிய சுத்திகரிப்பு மையமும் உள்ளது.

# குருவாயூரில் 50 ஆண்டுகளாக ஹிந்து எம்எல்ஏ இல்லை! பாஜக வேட்பாளர் சர்ச்சை பேச்சு



**திருவனந்தபுரம், மார்ச் 24:**

கேரளத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புனித தலங்களில் குருவாயூர் முக்கியத்துவம் வாய்ந்து திகழ்கிறது. அங்குள்ள கிருஷ்ணர் கோவிலுக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வழிபடுகின்றனர்.

இந்நிலையில், ஹிந்துக்கள் அதிகமுள்ள குருவாயூர் சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து இதுவரை ஒரு ஹிந்து எம்எல்ஏகூட தேர்ந்தெடுக்கப்படாதது ஏன்? என்று அத்தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் பி. கோபாலகிருஷ்ணன் பேசிவிடியோ வெளியிட்டு வாக்காளர்களிடம் வாக்கு சேகரித்தார்.

அவர் பேசிய அந்த விடியோவில், சுமார் ஐம்பது ஆண்டுகளாக குருவாயூர் தொகுதியிலிருந்து ஒரு ஹிந்து எம்எல்ஏ கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும், இடதுசாரி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான முன்னணிகள் இத்தொகுதியில் தங்கள் கூட்டணிகள் சார்பில் ஹிந்து வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்றும் பேசியிருக்கிறார். மேலும் அவர், குருவாயூர் ஒரு சர்வதேச புனித தலம். குருவாயூரப்பனின் நிலம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக கோயில் திருடர்களின் கைகளில் உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்கண்ட காணொலி கேரள தேர்தல் களத்தில் சர்ச்சையை கிளப்பியுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி பாஜக வேட்பாளர் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக எதிர்கட்சிகள் தரப்பிலிருந்து கோபாலகிருஷ்ணன் மீது கண்டனக் குரல்கள் வலுத்துள்ளன. இதையடுத்து, வகுப்புவாத பிரிவினையைத் தூண்டும் விதத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக கோபாலகிருஷ்ணன் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காங்கிரஸ் தரப்பில், கேரள மாணவர்கள் யூனியன் (கேஎஸ்யூ) காவல் துறையிடம் புகார் அளித்துள்ளதுடன் உயர்நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், அந்த வேட்பாளரை தகுதிநீக்கம் செய்ய கோரப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் தேர்தல் அதிகாரிகளிடமும் அவர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து பேசிய மாநில தலைமை தேர்தல் நடத்தும் அலுவலர் யூ. ரத்தன் கேல்கர், சர்ச்சைப் பேச்சு விவகாரத்தில் அம்மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# சிறைகளின் நிலை: அறிக்கை சமர்ப்பிக்க மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

**திருவனந்தபுரம், மார்ச் 24:**



சிறைகளில் மனிதத்தன்மை யற்ற சூழல் நிலவுவதாக கடந்த 2023-இல் வெளியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் உள்ள சிறைகளின் நிலைகுறித்துஉச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் உச்சநீதிமன்றத்துக்குஉதவுபவராக மூத்த வழக்குரைஞர் கௌரவ் அகர்வால் செயல்பட்டு வருகிறார்.

இதுதொடர்பாக கடந்த 17-ஆம் தேதி நடைபெற்ற விசாரணையில் நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வுபிறப்பித்த உத்தரவில், ‘சிறைகளின் உண்மை நிலை குறித்து அறிய பல்வேறு தரவுகள் தேவைப்படுகின்றன.

எனவே, ஒவ்வொரு சிறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது அங்குள்ள கைதிகளின் எண்ணிக்கை, ஒதுக்கப்பட்டதைவிட அதிக எண்ணிக்கையிலான கைதிகளைக் கொண்ட சிறைகள் மற்றும் அதை ஒழுங்குபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பெண் கைதிகள் மற்றும் பெண்களுக்கான சிறைகள், பெண்கைதிகளுக்குசிறையில் அளிக்கப்பட்டுள்ள வசதிகள், பெண் கைதிகளோடு உள்ள குழந்தைகளுக்கான கல்வி மற்றும் மருத்துவ வசதிகள், சிறை ஊழியர்களின் எண்ணிக்கை, காலிப் பணியிடங்கள் மற்றும் அவற்றை நிரப்ப மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் உள்பட சிறை நிர்வாகம் குறித்த அனைத்து அண்மைத் தகவல்களையும் மே 18-ஆம் தேதிக்குள் மாநிலங்கள் மற்றும்யூனியன்பிரதேசங்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தின் உள்துறைச் செயலர்கள் சமர்ப்பிக்கும் இந்த அறிக்கைகளை நீதிமன்றத்துக்கு அனுப்புவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# தண்ணீர் பாதுகாப்பு, பொறுப்புமிக்க பயன்பாடு: பிரதமர் மோடி வலியுறுத்தல்!

**புதுடெல்லி, மார்ச் 24:**

நன்னீர் ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 22-ஆம் தேதி உலக தண்ணீர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மனித வாழ்க்கையின் அத்தியாவசிய மூலாதாரமான தண்ணீர்தான், பூமியின் எதிர்காலத்தை வடிவமைக்கிறது. நம்மை வாழ வைக்கும் தண்ணீரின் ஒவ்வொருதுளியையும் பாதுகாத்துபொறுப்புடன் பயன்படுத்தும் நமது லட்சியத்தை மீண்டும் உறுதி செய்ய வேண்டும். நீர் பாதுகாப்புக்கு நிலையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், விழிப்புணர்வை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை இந்த நாளில் பாராட்டுவோம்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

# உலக பயங்கரவாத குறியீட்டில் முதல் இடம் பிடித்த பாகிஸ்தான்

**புதுடெல்லி, மார்ச் 24:**

உலக அளவில் 163 நாடுகளில் பயங்கரவாத தாக்கம் தொடர்பாக பொருளாதாரம் மற்றும் அமைதி மையம் விரிவான ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது.இது தொடர்பான உலகளாவிய பயங்கரவாத குறியீட்டில் பாகிஸ்தான் முதல் இடம் பிடித்துள்ளது.

இதில், ஆப்கானிஸ்தான் போன்ற அண்டை நாடுகளுடன் பகைமையுடனான உறவை வளர்த்தது, தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-இ-தலிபான் (டி.டி.பி.) மற்றும் பலூசிஸ்தான் ராணுவம் போன்றவற்றால் அதிகரித்து வரும் வன்முறை ஆகிய தாக்கங்களால் பாகிஸ்தான் முதன்முறையாக இந்த நிலைமைக்கு சென்றடைந்துள்ளது. இதனால், அந்நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பில் ஆபத்து ஏற்பட்டு உள்ளது. இதேபோன்று, 2013-ம் ஆண்டில் இருந்து இதுவரையில், பாகிஸ்தானில் பயங்கரவாதம் தொடர்பான மரண எண்ணிக்கையும் பெரிய அளவில் அதிகரித்து உள்ளது. 2025-ம் ஆண்டில் 1,139 பயங்கரவாதம் தொடர்பான மரணங்களும், 1,045 பயங்கரவாத சம்பவங்களும் நடந்துள்ளன என அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இதில், டி.டி.பி. அமைப்பானது, அந்நாட்டில் கொடிய பயங்கரவாத குழுவாக தன்னை நிலைநிறுத்தி கொண்டதுடன், உலக அளவில் 3-வது கொடிய பயங்கரவாத அமைப்பாகவும் உள்ளது. அதனுடன் கடந்த ஆண்டில், உலகளவில் உள்ள 4 பெரிய பயங்கரவாத குழுக்களில் தன்னுடைய செயல்பாட்டை அதிகரித்த ஒரேயொரு இயக்கம் ஆகவும் இந்த டி.டி.பி. உருவெடுத்து உள்ளது என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

# கொலீஜியம் முறை இந்தியாவுக்கு மிகவும் பொருத்தமானது:

## முன்னாள் நீதிபதி பி.ஆர்.கவாய்!

**புதுடெல்லி, மார்ச் 24:**

கர்நாடக மாநிலம் பெங்களூரில் உச்சநீதிமன்ற வழக்குரைஞர் சங்கத்தின் முதல் தேசிய மாநாடு-2026-இன் நிறைவு நிகழ்ச்சியில் அவர் ஞாயிற்றுக்கிழமை பேசியதாவது:

கொலீஜியம் முறை முற்றிலும் பிழையற்ற முறை என்று நான் கூறமாட்டேன். குறைகளே இல்லாத முறை என்பது இல்லவே இல்லை. ஒவ்வொரு முறைக்கும் அதற்கே உரிய சாதகங்களும் பாதகங்களும் உள்ளன. எனினும் எனது பல ஆண்டுகால பணி அனுபவத்தின் அடிப்படையில், தற்சமயம் இந்தியாவுக்கு கொலீஜியம் முறை மிகவும் பொருத்தமானது. கொலீஜியம் தன்னிச்சையாகச் செயல்படுவதில்லை. பதவி உயர்வு மற்றும் பணியிடமாற்றம் செய்ய வேண்டிய நீதிபதிகளின் பெயர்களை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் இரு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் பரிந்துரை செய்கிறது. அதன் பின்னர் அந்தப் பெயர்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது.

அதுகுறித்து மத்திய அரசு, உளவுத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் கருத்துகள் மற்றும் தகவல்களைத் திரட்டி, அதன் அடிப்படையில் உச்சநீதிமன்ற கொலீஜியம் முடிவு எடுக்கிறது. பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட பிறகும் கூட, அதில் அரசுக்கு ஏதேனும் ஆட்சேபம் இருந்தால், அவை கொலீஜியத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. அந்த ஆட்சேபங்களை கொலீஜியம் பரிசீலித்து இறுதி முடிவை மேற்கொள்கிறது என்று தெரிவித்தார்.

# போரால் பாதிக்கப்பட்டுள்ள ஈரானுக்கு காஷ்மீர் மக்கள் நன்கொடை

**புதுடெல்லி, மார்ச் 24:**

ரமலான் பண்டிகைக்குப் பின்னர், காஷ்மீர் பள்ளத்தாக்கில் முஸ்லிம் மதத்தின் ஷியா பிரிவு மக்கள் அதிகமுள்ள பகுதிகளில் இளைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை வீடு வீடாக சென்று நன்கொடை வசூலித்தனர். இதுகுறித்து அந்தப் பகுதியைச் சேர்ந்த ஐஜாஸ் அகமது கூறுகையில், ‘இஸ்ரேலால் ஈரான் மீது திணிக்கப்பட்டுள்ள போரால் அங்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்கு துன்புறத்தலை அனுபவித்து வரும் மக்களுக்கு நாகரிக உலகம் குறைந்தபட்சம் உதவி செய்ய வேண்டும்’ என்றார்.

இதுகுறித்து அங்குள்ள அதிகாரிகள் கூறுகையில், ‘நன்கொடை அளித்தவர்கள், குறிப்பாக பெண்கள் தங்க ஆபரணங்கள், செம்பு பாத்திரங்கள் மற்றும் பிற வீட்டு உபயோக பொருள்களை அளித்தனர். சில குடும்பங்கள் கால்நடைகளையும் அளித்தன. சிறார்களும் தாங்கள் சேமித்து வைத்திருந்த பணத்தை அளித்தனர். பட்காம், பாரமுல்லா பகுதிகளில் இருந்து நன்கொடை அளிக்கப்பட்டது’ என்று தெரிவித்தனர். காஷ்மீர் மக்கள் அளித்த நன்கொடையின் புகைப்படங்களை ‘எக்ஸ்’ தளத்தில் பகிர்ந்து, இந்தியாவில் உள்ள ஈரான் தூதரகம் வெளியிட்ட பதிவில், ‘மனிதாபிமான உதவி மூலம் ஈரான் மக்களுக்கு உறுதுணையாக நிற்கும் காஷ்மீர் மக்களுக்கு நன்றி. அவர்களின் அன்பு மற்றும் மனிதாபிமானத்தை எப்போதும் ஈரான் மறக்காது. இந்தியாவுக்கு நன்றி’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இருவேறு இடங்களில் போலீஸார் தீவிர சோதனை: 44 கிலோ கஞ்சா பறிமுதல்; 8 இளைஞர்கள் கைது

**திருவள்ளூர்/ஆவடி, மார்ச்.24:** ஆந்திராவில் இருந்து தமிழகத்துக்கு கார் மற்றும் மினி லாரியில் கடத்தி வரப்பட்ட 27 கிலோ கஞ்சாவை நேற்று முன் தினம் போலீஸார் பறிமுதல் செய்து 5 இளைஞர்களை கைது செய் துள்ளனர்.

திருவள்ளூர் எஸ்.பி. விவேகானந்த சுக்லா உத்தரவின் பேரில் திருவள்ளூர் டிஎஸ்பி தமிழரசி தலைமையில் மப்பேடு போலீஸார் நேற்று முன்தினம் கண்ணூர் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, வந்த காரை நிறுத்தி போலீஸார் சோதனை செய்தபோது சுமார் 6 கிலோ கஞ்சா இருந்ததும், அதை ஆந்திராவில் இருந்து, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாதேஷ்(24), டோனி கவுதம் (23), அஜித்குமார் (29) ஆகிய 3 பேர் கடத்தி வந்ததும் தெரிய வந்தது.

அவர்களிடம் போலீஸார் நடத்திய விசாரணையில், பின்னால் வந்த மினி லாரியையும் சோதனை செய்தனர். அதில், முந்திரி கழிவு மூட்டைகளின் அடியில் 21 கிலோ கஞ்சாவை வேலூர் மாவட்டத்தை சேர்ந்த அருண் பாண்டியன்(26), லோகேஷ்(29) ஆகியோர் கடத்தி வந்தது தெரிய வந்தது.

விசாரணையில், மாதேஷ் உள்ளிட்ட 5 பேர், ஒடிசா மாநிலத்தில் இருந்து, ரயில் மூலமாக ஆந்திராவுக்கு கஞ்சாவை கடத்தி வந்து, அங்கிருந்து கார் மற்றும் மினி லாரியில் கஞ்சாவை கடத்தி வந்தது தெரிய வந்தது.

அவர்களிடம் இருந்து 27 கிலோ கஞ்சா, மினி லாரி, கார், 5 செல்போன்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

சென்னை, அம்பத்தூர்- ஒரகடம் பகுதியில் நேற்று காலை அம்பத்தூர் போலீஸார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு சுற்றித் திரிந்த, ஆவடி சிந்து நகரைச் சேர்ந்த மகேஷ் (23), பட்டாபிராம் - அண்ணா நகரைச் சேர்ந்த அஜய் குமார் (19) ஆகியோரின் கைப்பைகளை போலீஸார் சோதனை செய்தபோது 10 கிலோ கஞ்சா இருந்தது தெரிய வந்தது.

அவர்களிடம் போலீஸார் நடத்திய விசாரணையில், திருப்பதியில் இருந்து கஞ்சாவை கடத்தி வந்தது தெரியவந்தது. அதே போல அம்பத்தூர்- சண்முகபுரம் புழல் ஏரிக்கரை பகுதியில் நேற்று போலீஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த நரசிம்மனை(29) போலீஸார் சோதனை செய்ததில், ஆந்திர மாநிலத்தில் இருந்து, 7 கிலோ கஞ்சாவை கடத்தி வந்து விற்பனை செய்ய முயன்றது தெரிய வந்தது. மகேஷ், அஜய்குமார், நரசிம் மனை கைது செய்து, 17 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# வியாபாரிகளிடம் 45 கிலோ வெள்ளிக் கட்டிகள் மோசடி: சென்னையில் இளம்பெண் உட்பட 3 பேர் கைது



**வியாசர்பாடி, மார்ச்.24:** வியாசர்பாடியில் வியாபாரிகளிடம் 45 கிலோ வெள்ளி கட்டிகளை மோசடி செய்த பெண் உட்பட 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.


சென்னை சவுகார்பேட்டை, சின்ன நாயக்கன் தெருவை சேர்ந்த திலீப் குமார் (44) என்பவர் வெள்ளி வியாபாரம் செய்து வருகிறார். இவர், வியாசர்பாடியில் வெள்ளிப் பட் டறை நடத்தி வந்த முருகன் என்பவரிடம் வெள்ளிக் கட்டிகளைக் கொடுத்து, பொருட்களை செய்து வாங்குவதை வழக்கமாக கொண்டிருந்தார். கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் வெள்ளி சொம்பு உள்ளிட்ட பொருட்கள் செய்வதற்காக 30.5 கிலோ வெள்ளிக் கட்டிகளை முருகனிடம் திலீப் குமார் ஒப்படைத்துள்ளார். இதேபோல், ஆசிப் என்ற மற்றொரு வியாபாரியும் 15 கிலோ வெள்ளிக் கட்டிகளை முருகனிடம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில், முருகன் உயி ரிழந்தார். இதைத் தொடர்ந்து, திலீப் குமாரும் ஆசிப்பும் தாங் கள் கொடுத்த 45.5 கிலோ வெள்ளிக் கட்டிகளை திருப் பித் தருமாறு முருகனின் மனைவி தனலட்சுமி (31), முருகனின் அண்ணன் சதீஷ் குமார் (39) மற்றும் தனலட்சுமியின் தந்தை வேதாச்சலம் (61) ஆகியோரிடம் கேட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் வெள் ளியை திருப்பித் தராமல் கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட வியாபாரிகள் அளித்த புகாரின் பேரில், யானைகவுனி போலீஸார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். முருகன் இறந்த பிறகு, பட்டறையில் இருந்த 45.5 கிலோ வெள்ளிக் கட்டிகளை மூவரும் விற்றுள்ளனர். அந்த பணத்தில் கடனை அடைத்து புதிய கார் வாங்கி சொகுசாக செலவு செய்தது தெரியவந்தது.

இதையடுத்து, மோசடி மற்றும் கொலை மிரட்டல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் தனலட்சுமி. சதீஷ்குமார் மற்றும் வேதாச்சலம் ஆகிய மூவரையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# ரயில் மீது கல் வீசுவோருக்கு எதிராக நடவடிக்கை: சென்னை ரயில்வே கோட்டம் எச்சரிக்கை



**சென்னை, மார்ச்.24:** ரயில்கள் மீது கல்வீசும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, சென்னை ரயில்வே கோட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்டம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில், ஓடும் ரயில்கள் மீது கல்வீசும் சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இத்தகைய சட்டவிரோத செயல்கள் பயணிகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவதோடு, ரயில்வே ஊழியர்களுக்கு ஆபத்தையும், பொதுச் சொத்துகளுக்கு சேதத்தையும், ரயில் சேவையில் இடையூறுகளையும் ஏற்படுத்துகின்றன.

ரயில்கள் மீது கல்வீசுவது ஒரு கடுமையான குற்றமாகும். ஓடும் ரயிலின் மீது வீசப்படும் கற்கள் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து, உள்ளே இருக்கும் பயணிகள், குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்குப் பெரிய காயங்களையும், நிரந்தர உடல் பாதிப்புகளையும் ஏற்படுத்தக் கூடும்.

மேலும், இத்தகைய சம்பவங்கள் பயணிகளிடையே தேவையற்ற அச்சத்தையும், மன உளைச்சலையும் உண்டாக்குகின்றன. ரயில்வே சட்டம், 1989-ன் கீழ் ரயில்கள் மீது கல்வீசுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ரயில் தண்டவாளங்களுக்கு அருகே வசிக்கும் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், இத்தகைய செயல்களால் ஏற்படும் விளைவுகள் குறித்து சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி அறிவுரை வழங்க வேண்டும். இத்தகைய அசம்பாவிதங்களைத் தடுக்க சமூகத்தின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும்.

ரயில் தண்டவாளங்களுக்கு அருகே சந்தேகத்துக்கிடமான செயல்கள் ஏதேனும் நடந்தால், பொதுமக்கள், பயணிகள் உடனடியாக ரயில்வே உதவி எண் 139-க்குத் தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தானியங்கி சிக்னல் அமைக்கும் பணி நடைபெறுவதால் நாளை 13 ரயில்களின் சேவையில் மாற்றம்



**சென்னை, மார்ச்.24:** ஜோலார்பேட்டை - தொட்டம்பட்டி இடையே தானியங்கி சிக்னல் அமைக்கும் பணி நடைபெறுவதால், 13 ரயில்களின் சேவையில் நாளை மாற்றம் செய்யப்பட உள்ளது.

இதன்படி, அரக்கோணம் - சேலத்துக்கு நாளை ( 24-ம் தேதி) அதிகாலை 5.15 மணிக்கு இயக்கப்படும் மெமு விரைவு ரயில், சேலம் - அரக்கோணத்துக்கு அதேநாளில் பிற்பகல் 3.30 மணிக்கு இயக்கப்படும் மெமு விரைவு ரயில், கோவை - சென்னை சென்ட்ரலுக்கு அன்றைய தினம் காலை 6.20 மணிக்கு இயக்கப்படும் இன்டர்சிட்டி விரைவு ரயில், சென்னை சென்ட்ரல் - கோவைக்கு பிற்பகல் 2.30 மணிக்கு இயக்கப்படும் இன்டர்சிட்டி விரைவு ரயில், ஈரோடு - ஜோலார்பேட்டைக்கு அதேநாளில் காலை 6 மணிக்கு இயக்கப்படும் பாசஞ்சர் ரயில், ஜோலார்பேட்டை - ஈரோடுக்கு பிற்பகல் 2.45 மணிக்கு இயக்கப்படும் பாசஞ்சர் ரயில் ஆகிய 6 ரயில்கள் ரத்து செய்யப்பட உள்ளன.

சென்னை சென்ட்ரல் - கோவைக்கு நாளை மதியம் 2.15 மணிக்கு புறப்பட வேண்டிய வந்தே பாரத் ரயில், இரண்டு பணி நேரம் தாமதமாக மாலை 4.15 மணிக்கு புறப்படும்.

கோவை - சென்னை சென்ட்ரலுக்கு நாளை பிற்பகல் 3.15 மணிக்கு புறப்பட வேண்டிய கோவை விரைவு ரயில், 2 மணி நேரம் தாமதமாக மாலை 5.15 மணிக்கு புறப்படும்.

இதுதவிர, 2 விரைவு ரயில்கள் ஒன்றரை மணி நேரம் இடையில் ஆங்காங்கே நின்று செல்லும். 3 ரயில்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்பட உள்ளன.

இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரிசுப் பொருட்களை கொண்டு செல்வதைத் தடுக்க புறநகர் மின்சார ரயில் நிலையங்களில் தீவிர கண்காணிப்பு



**சென்னை, மார்ச்.24:** புறநகர் மின்சார ரயில் பகுதிகளில் பரிசுப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை தடுக்கும் வகையில், 24 மணி நேர கண்காணிப்பு தொடங்கப்பட்டுள்ளதாக ரயில்வே போலீஸார் தெரிவித்தனர்.

சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் தேர்தல் கண்காணிப்பு சிறப்புப் பிரிவை ஏற்படுத்தி, கடந்த 3 வாரங்களில் ரூ.1.60 கோடி தங்கக்கட்டிகள், ரூ.11.66 கோடி வெள்ளி கட்டிகள், ரூ.1.50 கோடி பணம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இதற்கிடையில், புறநகர் மின்சார ரயில்களில் தேர்தலுக்கான பரிசுப் பொருட்கள் கொண்டு செல்ல வாய்ப்பு இருப்பதாகத் தகவல் வெளியானது.

இதையடுத்து சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களின் புறநகர் மின்சார ரயில் வளாகப் பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் ரயில்களின் வருகை, பயணிகள் நடவடிக்கை ஆகியவற்றைக் கண்காணிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ரயில்வே போலீஸார் கூறியதாவது: சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்தோ வெளியூர்களிலிருந்து வரும் புறநகர் மின்சார ரயில்கள் மூலமோ தேர்தலுக்கான பரிசுப் பொருட்கள் கொண்டு செல்வதைத் தடுக்கும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளோம்.

அதற்காக 4 பேர்கொண்ட 2 சிறப்பு கண்காணிப் புக்குழுவையும் அமைத்துள்ளோம். அந்தக் குழுவினர் கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் காட்சிகளை ஆய்வுக்கு உட்படுத்தி சந்தேக பயணிகள் குறித்து தகவல் தெரிவிப்பர்.

அந்த தகவலின்படி, சம்பந்தப்பட்ட பயணிகளை சோதனையிட்டு வருகிறோம். கடந்த 2 நாட்களில் தினசரி 220 புறநகர் மின்சார ரயில் சேவைகளை கண்காணித்து வருகிறோம்.

இதுபோல, எழும்பூர் ரயில் நிலையத்திலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பறவை காய்ச்சல் எதிரொலி: தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்




**சென்னை, மார்ச்.24:** அடையாறு பகுதியில் சமீபத்தில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், எச்5என்1 எனப்படும் பறவை காய்ச்சல் பாதிப்பு இருந்தது உறுதியானது.

இதையடுத்து, கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமை செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியது. அதன்படி, தமிழக சுகாதாரத்துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பறவை காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவக்கூடும்.

பாதிக்கப்பட்ட பறவையிடம் இருந்தோ, மனிதரிடம் இருந்தோ மற்றவர்களுக்கு, 'வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

அதனால், காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், சென்னையை தொடர்ந்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் காகங்கள் உயிரிழந்தன. கிண்டி உயிரியல் பூங்காவில் பறவைகள் உயிரிழந்ததால், பூங்கா மூடப்பட்டது.

இது தொடர்பாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் பறவை காய்ச்சலால் காகங்கள் உயிரிழந்தாலும், மற்ற பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பாதிப்பு கண்டறியப்படவில்லை. காகங்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இறந்த பறவைகளை வெறும் கைகளால் அப்புறப்படுத்தக் கூடாது. அறிகுறிகள் இருந்தால், அலட்சியமாக இல்லாமல் உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

பறவை காய்ச்சலால் கோழிகள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

கோழி இறைச்சியை நன்கு வேக வைத்து சாப்பிட வேண்டும். தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து வருகிறது. பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம்" என்றனர்.

# அண்ணாமலையார் கோயிலில் மீண்டும் பிரசாதம்: விறகு அடுப்பை பயன்படுத்தி லட்டு தயாரிப்பு

**பக்தர்களுக்கு வழங்க அறநிலையத் துறை ஏற்பாடு**



**திருவண்ணாமலை, மார்ச்.24:** திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனம் முடிந்து வெளியே வரும் பக்தர்களுக்கு இலவசமாக லட்டு பிரசாதம் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனம் முடிந்து வெளியே வரும் பக்தர்களுக்கு இலவசமாக லட்டு பிரசாதம் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை: திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்ட இலவச லட்டு பிரசாதம் மீண்டும் வழங்கும் பணி தொடங்கியது.

அண்ணாமலையார் கோயிலுக்கு வணிக காஸ் சிலிண்டர் கிடைக்காததால் பிரசாதம் தயாரிக்க முடியாமல் இலவசமாகப் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த லட்டு பிரசாதம் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று இந்து சமய அறநிலையத்துறையின் உத்தரவின்படி, கோயில் வளாகத்தில் இலவச லட்டு பிரசாதம் தொடர்ந்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டு, விறகு அடுப்பு மூலமாக லட்டு தயாரிக்கும் பணி நடைபெற்று, நேற்று காலை முதல் மீண்டும் பக்தர்களுக்கு இலவச லட்டு பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் பிரசாத விற்பனை நிலையத்தில் புளி சாதம் மற்றும் சர்க்கரை பொங்கல் மட்டுமே பக்தர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

லட்டு, அதிரசம், முறுக்கு, மிளகு வடை ஆகியவை வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் தயாரிக்க முடியாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

# வாக்குச்சாவடிகளில் முதல்முறையாக வாக்காளர்கள் செல்போனை வைக்க தனி அறை



**சென்னை, மார்ச்.24:** சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளில் குடிநீர் உள்ளிட்ட குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வாக்குச் சாவடிக்கு வெளியே வாக்காளர்கள் செல்போனை பாதுகாப்பாக வைத்துவிட்டு செல்லவும் முதல்முறையாக வசதி செய்யப்பட உள்ளது.

இதுதொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் 6 மாநிலங்களில் இடைத் தேர்தல்களுக்கான அட்டவணை கடந்த மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலையொட்டி, வாக்குச் சாவடிகளில் ஒவ்வொன்றிலும் உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் செய்யப்படுவதை உறுதி செய்ய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகளான குடிநீர், நிழலுடன் கூடிய காத்திருப்புப் பகுதி, தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை, போதிய வெளிச்சம், மாற்றுத் திறன்வாக்காளர்களுக்கான முறையான சாய்வுதளம், தரப்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு அறை மற்றும் முறையான வழிகாட்டி பலகைகள் ஆகியவை இடம்பெற வேண்டும்.

வாக்காளர்கள் உட்கார பெஞ்ச்: வாக்காளர்கள் தங்களது முறைக்காக காத்திருக்கும் போது அமருவதற்கு ஏதுவாக, வரிசையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் பெஞ்சுகள் அமைக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

வாக்காளர் விழிப்புணர்வை வலுப்படுத்த, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 4 சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட வாக்காளர் வசதி சுவரொட்டிகள் முக்கியமாக காட்சிப்படுத்தப்படும்.

சுவரொட்டியில் விவரங்கள்: இந்த சுவரொட்டியில் வாக்குச்சாவடி விவரங்கள், வேட்பாளர் பட்டியல், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களின் பட்டியல் மற்றும் வாக்குப் பதிவு நடைமுறை ஆகிய முக்கிய விவரங்கள் இடம்பெறும். வாக்காளர்கள் தங்களது வாக்குச் சாவடி எண் மற்றும் அந்தந்த சாவடியின் வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண்ணைக் கண்டறிய உதவுவதற்காக, ஒவ்வொரு வாக்குச் சாவடி அமைவிடத்திலும் பிஎல்ஓக்கள், அதிகாரிகள் குழுவுடன் கூடிய வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்படும். வாக்காளர்கள் வாக்குச் சாவடி வளாகத்தை நெருங்கும் போது எளிதில் தெரியும் வகையில் இந்த உதவி மையங்கள் முக்கிய வழிகாட்டிப்பலகைகளைக் கொண்டிருக்கும்.

வாக்குச் சாவடி நுழைவு வாயிலுக்கு வெளியே வாக்காளர்களுக்கான செல்போன் வைப்பு அறை வசதி முதல்முறையாக அமைக்கப்பட உள்ளது. வாக்காளர்கள், வாக்குச் சாவடிக்குள் நுழைவதற்கு முன்பு தங்களது செல்போனை, நியமிக்கப்பட்ட தன்னார்வலரிடம் ஒப்படைத்துவிட்டு, வாக்களித்த பிறகு அதைபெற்றுக் கொள்ளலாம். இந்த பணிகளை தேர்தல் தேதிகளுக்கு முன்னதாகவே முடிக்குமாறு அனைத்து களப் பணியாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர் விடுமுறையையொட்டி வேளாங்கண்ணி, சித்தன்னவாசலில் குவிந்த சுற்றுலா பயணிகள்



நாகப்பட்டினம்தொ, மார்ச்.23: டர் விடுமுறை காரணமாக வேளாங்கண்ணியில் சுற்றுலா பயணிகள் குடும்பத்தோடு நேற்று குவிந்தனர். புகழ்பெற்ற வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்திற்கு தினந்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில் கிறிஸ்தவர்களின் 40 நாட்கள் தவக்காலம் தொடங்கி கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 19ம்தேதி முதல் தொடர்ந்து விடுமுறை நாட்கள் என்பதால் தமிழக மட்டுமல்லாமல் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வேளாங்கண்ணி பேராலயத்திற்கு வருகை தந்தனர். அவர்கள் குடும்பத்தோடு ஆரோக்கிய அன்னையை வழிபாடு செய்தனர்.

தவக்காலம் என்பதால் சிலர் விரதம் இருந்து குடும்பத்தோடு வருகை தந்து ஆரோக்கிய அன்னைக்கு மாலை அணிவித்தும், மெழுகுவர்த்தி ஏற்றியும் வழிபாடு செய்தனர். சிலுவை பாதையில் மண்டியிட்டு நடந்து தங்களது பிரார்த்தனையை நிறைவேற்றினர். வேளாங்கண்ணி பழைய மாதா கோவில், நடுத்திட்டு, கடை தெரு, கடற்கரை சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

வேளாங்கண்ணி கடற்கரையில் குடும்பத்தோடு நின்று செல்பி எடுத்தனர். வெயிலில் தாக்கத்தை தாக்கு பிடிக்க முடியாமல் கடலில் குளித்தும் மகிழ்ந்தனர். புதுக்கோட்டையில் இருந்து 15 கி.மீ மணப்பாறை சாலையில் சித்தன்னவாசல் சுற்றுலா ஸ்தலம் உள்ளது. இங்குள்ள சமணர் படுக்கை உலக புகழ்பெற்ற குகை ஓவியம் புகழ் பெற்றது. இது தென்னிந்தியாவின் அஜந்தா என்று அழைக்கப்படுகிறது.

இங்கு 7ம் நூற்றாண்டு ஓவியங்கள் மிகவும் பிரபலம், சமண முனிவர்கள் படுக்கைகள் மற்றும் கல் வெட்டுகள் உள்ளனர். இவை இந்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் இங்கு மரங்கள் சிற்பங்கள் மற்றும் பொம்மைகளுடன் அமைக்கபட்ட பூங்கா, சிறுவர் விளைாடி மகிழ்ந்தும், படகு குழாம் சுற்றுலாபயனிகள் மகிழும் வண்ணம் அமைந்திருந்து என்று சுற்றுலா பயனிகள் கூறினர். இந்திய அரசியல்

யுகாதி வருட பிறப்பு, ரம்ஜான் பண்டிகை விடுமுறை என்பதால் புதுக்கோட்டை, மணப்பாறை. திருச்சி, தேவகோட்டை, விராலிமலை உள்ளிட்ட மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் இருந்து வாகனங்களில் குடும்பம் குடும்பமாக வருகை புரிந்தனர். உலக பிரசித்தி பெற்ற மலைமேல் உள்ள சமணர் படுக்கை, குகை ஓவியம் ஆகியவற்றை பார்த்து விட்டு பூங்கரகளில் சுற்றி பார்த்து ரசித்தனர். மேலும் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.

சில சுற்றுலா பயணிகள் காலைகுடும்பத்துடன் வந்து நாள் முழுவதும் பூங்காகள் மற்றும் மழை சூழ்ந்த இயற்கை அழகை கண்டு ரசித்தனர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் முதல் அனைவரும் பூங்காக்களில் இருந்த சிலைகள் மற்றும் பொம்மைகளில் அருகில் இருந்து புகைபடம் எடுத்து கொண்டனர்.

இளம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். தேவகோட்டை பகுதியில் இருந்து வானத்தில் குடும்பமாக வந்த சுற்றுலா பயணிகள் பூங்காவில் கேக் வெட்டி அனைவருக்கும் கொடுத்து புத்தாண்டு வாழ்த்துக்கள் சொல்லி மகிழ்ந்தனர்.

சிறுவர்கள் விளையாட்டு திடலில் அமைக்கப்பட்டிருந்த விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த ஊஞ்சல் போன்றவைகளில் ஆடி விளையாடி மகிழ்ந்தனர். மைதானத்தில் சிறுவர் சிறுமியர்கள் விளையாட விளையாட்டு பொழுதுபோக்கு கட்டமைப்புகள் கூடுதலாக அமைத்து மேம்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள், சுற்றுலா பயணிகளுக்கு எதிர்பார்த்துள்ளனர்.

## உரிய ஆவணங்களின்றி காரில் எடுத்துச் சென்ற ரூ.20 கோடி தங்கம், வெள்ளி நகைகள் பறிமுதல்



பல்லாவரம், மார்ச்.24: சென்னை பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூரில் உரிய ஆவணங்கள் இல்லாமல் காரில் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.19.63 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி நகைகளை தேர்தல் நிலைக் கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்தனர்.

சென்னை பல்லாவரம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட அனகாபுத்தூர் பகுதியில் தேர்தல் நிலை கண்காணிப்பு குழுவினர் நேற்று காலை வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, ஒரு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது, 24 பெட்டிகளில் மொத்தம் 13 கிலோ தங்க நகைகள், 34 கிலோ வெள்ளி நகைகள் என மொத்தம் ரூ.19.63 கோடி மதிப்பிலான நகைகளை பிரபல நகைக் கடைக்கு எடுத்துச் செல்வது தெரியவந்தது.

ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் நகைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்து, வருமான வரித்துறையினரிடம் ஒப்படைத்தனர். பல்லாவரம் அடுத்த திருநீர்மலை பகுதியில் நேற்று முன் தினம் இரவு தேர்தல் நிலை கண்காணிப்பு குழுவினர் ஒரு காரை நிறுத்தி சோதனை செய்தனர்.

காரில் இருந்த திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனந்த சிவசங்கர் என்பவர் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் சென்ற ரூ.1.08 லட்சம் பணத்தை கைப்பற்றி அரசுக் கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கோவிலாஞ்சேரி பகுதியில் தேர்தல் பறக்கும் படை குழுவினர் நேற்று முன் தினம் இரவு ஒரு லாரியை மடக்கி சோதனை செய்தனர். லாரியில் இருந்த மதுராந்தகம் பகுதியைச் சேர்ந்த பூமணி (30) என்பவர் உரிய ஆவணங்கள் இல்லாமல் வைத்திருந்த ரூ.1 லட்சத்தை கைப்பற்றி, தாம்பரத்தில் உள்ள அரசுக் கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

தமாகா சென்னை மாவட்ட செயலாளராக இருப்பவர் பிஜு சாக்கோ (57). ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார். பெரம்பூரில் வசிக்கிறார். இவர் நேற்று முன் தினம் காலை நண்பர் வினோத் (40) என்பவருடன் காரில் சென்றார். ஓட்டேரி பகுதியில் சென்ற போது தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள், போலீஸார் இணைந்து காரை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது, காரில் ரூ.1.19 லட்சம் பணம் இருந்தது. அது ரியல் எஸ்டேட் தொழில் தொடர்பான பணம் என்று பிஜு தெரிவித்துள்ளார்.

ஆனால், முறையான ஆவணங்கள் இல்லாததால், பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல்செய்தனர். உரிய ஆவணங்களை காண்பித்து பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு அவரிடம் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## குளித்து மகிழ்ந்த சுற்றுலா பயணிகள்



சாத்தனூர் அணையில் இருந்து வெளியேற்றப்பட்ட கால்வாய் நீரில் குளித்து மகிழ்ந்த சுற்றுலா பயணிகள்

## மாணவர்களின் மனநலம் பாதுகாப்பு, தற்கொலை தடுப்புக்கு புதிய மனநலக் கொள்கையை வெளியிட்டது அரசு



சென்னை, மார்ச்.24: தமிழகத்தில் மாணவர்களின் மனநலம் பாதுகாப்பு, தற்கொலை தடுப்புக்கு புதிய கொள்கையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.


தமிழகத்தில் மாணவர்களின் உளவியல் பாதிப்புகளுக்குத் தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் வினீத் தலைமையில் சிறப்பு குழு ஒன்றை தமிழக அரசு அமைத்தது. இதில் பள்ளிக் கல்வி, உயர்கல்வி, சட்டத் துறை, உள்துறை அதிகாரிகள், மனநல நிபுணர்கள் இடம்பெற்றிருந்தனர்.

கடந்த மாதம் இந்த குழு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில், சில வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய மனநலக் கொள்கையை அரசு வெளியிட்டுள்ளது. அதில், மாணவர்களின் மன அழுத்தத்தைக் கண்டறிந்து, அவர்களைப் பாதுகாக்கத் தேவையான வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன. உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை ஏற்று இதுதொடர்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள மனநலக் கொள்கையில் கூறப்பட்டுள்ளதாவது: பள்ளி, கல்லூரிகளில் மனநல ஆலோசகர்கள், ஆலோசனை மையங்கள் மூலம் மாணவர்களின் தனித்திறனை ஊக்குவிப்பதுடன், நண்பர்கள் இடையே ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொள்ளும் நல்லாதரவு நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். இளைஞர் மன்றங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மனநல ஆலோசனைகள் தேவைப்படும் மாணவர்கள் '14416', '14417', '104', '1098', '181' ஆகிய உதவி எண்களை தொடர்பு கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும். தீவிர மனநல பாதிப்பு உள்ள மாணவர்களை அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். தற்கொலை தடுப்பு நடவடிக்கைகளில் ஆசிரியர்கள், பெற்றோர், ஆலோசகர்கள், சக மாணவர்கள் என அனைவரது பங்களிப்பும் அவசியம் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் யானைகள் நடமாட்டம்: சுற்றுலா பயணிகள் செல்ல தடை



கொடைக்கானல்கொ, மார்ச்.24: டைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் யானைகள் நடமாட்டம் இருப்பதால் திங்கட்கிழமை (இன்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் பேரிஜம் ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளது.

இதனால் வனத்துறையினரிடம் அனுமதி பெற்றே சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியும்.

பேரிஜம் ஏரிக்கு செல்லும் வழியில் தொப்பி தூக்கிப் பாறை, மதிகெட்டான் சோலை, வியூ பாய்ண்ட், அமைதி பள்ளத்தாக்கு உள்ளிட்ட இடங்களை பார்க்கலாம்.

இந்நிலையில் நேற்று (மார்ச் 22) பிற்பகல் முதல் பேரிஜம் ஏரி பகுதியில் யானை நடமாட்டம் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அங்கு செல்வதற்கு திங்கட்கிழமை (இன்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை வனத்துறை தடை விதித்துள்ளது.

இது குறித்து வனத்துறையினர் கூறும் போது, யானை நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். யானை இடம் பெயர்ந்து வனப்பகுதிக்குள் சென்றதும் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுவர்' என்றனர்.

## அரசியல் கார்னர்

## பாஜகவில் எனக்கு எந்த பொறுப்பும் வழங்காமல் தேர்தல் களத்தில் எப்படி பணியாற்றுவது? - சரத்குமார் கேள்வி



சென்னை, மார்ச்.24: பாஜகவில் எனக்கு எந்த பொறுப்பும் வழங்க வில்லை. பொறுப்புகள் இல்லாமல் தேர்தல் களத்தில் எப்படி பணியாற்ற முடியும் என நடிகர் சரத்குமார் கேள்வி எழுப்பி உள்ளார்.

சென்னை தி.நகரில் பாஜக நிர்வாகி நடிகர் சரத்குமார் தலைமையில் அவரது ஆதரவாளர்கள் கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில், அகில இந்திய சரத்குமார் தலைமை ரசிகர் நற்பணி மன்றம், நாட்டாமை குடும்பத்தினர், சுப்ரீம் ஸ்டார் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் சரத்குமார் கூறியதாவது: இந்தச் சந்திப்பில் நிர்வாகிகள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். குறிப்பாக, பாஜகவில் எனக்கு இதுவரை எந்தப் பொறுப்பும் வழங்கப்படாதது குறித்து அவர்கள் கேள்வி எழுப்பினர். தேர்தல் நெருங்கும் வேளையில், உரிய பொறுப்புகள் இல்லாமல் எப்படித் தேர்தல் களத்தில் பணியாற்ற முடியும் என்பதே அவர்களின் பிரதான கேள்வி.

எங்கள் மாநில நிர்வாகிகளுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில், 'தலைவருக்கே (சரத்குமார்) பொறுப்பு இல்லாதபோது, எங்களுக்கு மட்டும் பொறுப்புகள் இருந்து என்ன பயன்?'என்ற கருத்தை நிர்வாகிகள் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர். கடந்த 2024 மார்ச் 12-ம் தேதி நாங்கள் பாஜகவில் இணைந்தோம்.

தேசிய அளவில் எனக்கு முக்கியப் பொறுப்பு வழங்கப்படும் என்று அப்போது உறுதியளிக்கப்பட்டது. ஆனால், தற்போது வரை எந்த பொறுப்பும் வழங்கப்படவில்லை. கார் ஓட்டத் தெரிந்தும், ஓட்டுநர் உரிமம் இருந்தும், காரை ஓட்ட அனுமதிக்கவில்லை என்றால் அதில் என்ன நியாயம் இருக்கிறது? கட்சியில் ஒரு பொறுப்பு இருந்தால் மட்டுமே என்னால் முழுமையாகச் செயல்பட முடியும்.

திருச்சி மாநாட்டில் எனது புகைப்படம் கூட மேடையில் இடம்பெறாதது நிர்வாகிகளிடையே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. பாஜகவில் பொறுப்பு வழங்க வேண்டும் என்ற எங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, பாஜக மாநிலத் தலைவருக்கும், தேசியத் தலைமைக்கும் கடிதம் அளிக்கவுள்ளேன். தலைமை எங்களது நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஒருவேளை பொறுப்புகள் வழங்கப்படவில்லை என்றால், மீண்டும் ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தி எனது அடுத்தகட்ட நிலைப்பாட்டை அறிவிப்பேன்.

தற்போதைய சூழலில் சமத்துவ மக்கள் கட்சியை மீண்டும் தொடங்கும் எண்ணம் எனக்கு இல்லை. அதேபோல், நடைபெறவுள்ள தேர்தலில் நானும், எனது மனைவி ராதிகாவும் போட்டியிடப் போவதில்லை. தற்போது வரை பாஜக எத்தனை இடங்களில் போட்டியிடுகிறது என்ற தெளிவு கூட இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## மார்க்சிஸ்ட்டுக்கு 5 தொகுதிதான்: முதல்வர் ஸ்டாலின் உறுதி



சென்னை, மார்ச்.24: திமுக - மார்க்சிஸ்ட் தொகுதிப் பங்கீட்டில் இழுபறி நீடிக்கும் நிலையில், 5 தொகுதிகளை பெற்றுக்கொள்ளுமாறு முதல்வர் வைத்த வேண்டுகோளை பரிசீலிப்போம் என மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

திமுக கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகளை ஒதுக்க திமுக முன் வந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் கூடியது. இரவு வரை நீடித்த இக்கூட்டத்தில் திமுகவிடம் கடந்த முறை போட்டியிட்ட 6 தொகுதிகளையாவது கேட்டு பெறுவது என முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் அண்ணா அறிவாலயத்தில் திமுகவுடனான 4-ம் கட்ட பேச்சுவார்த்தைக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குழு நேற்று சென்றது.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த முறையும் உடன்பாடு ஏற்படாமல் பேச்சுவார்த்தை முடிவுற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் கூறியதாவது: கூட்டணியில் புதிதாக கட்சிகள் இணைந்திருப்பதால் தொகுதிகளை ஒதுக்கீடு செய்வதில் இருக்கக்கூடிய சிரமங்களை முதல்வர் எங்களிடத்தில் பகிர்ந்து கொண்டார். அதனால் 5 தொகுதிகளை ஏற்று ஒத்துழைப்பு தருமாறு முதல்வர் கேட்டுக்கொண்டார். ஆனால் 6 தொகுதிகளுக்கு தான் கட்சியின் மாநிலக் குழு ஒப்புதல் தருவதற்கு அனுமதி அளித்திருந்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த கூட்டணியில் நீடிக்க விரும்புகிறோம். கடந்தமுறை எங்களது பலம் இருக்கும் மாவட்டங்களில், எங்களுக்கான தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அப்படி கிடைத்திருந்தால் 6 தொகுதிகளிலும் வெற்றிபெற்றிருப்போம். எனவே, முதல்வரின் வேண்டுகோளை கட்சியின் மாநிலக் குழு கூட்டத்தை கூட்டி பரிசீலித்து முடிவு செய்வோம். எத்தனை தொகுதிகள் கொடுப்பார்கள், அதற்கேற்ப கூட்டணியில் நீடிப்பதா? வேண்டாமா? என்பதை பற்றி யோசிக்கும் கட்சி மார்க்சிஸ்ட் அல்ல.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இருந்துதான் 2026 சட்டப்பேரவை தேர்தலை சந்திப்போம். உடன்பாடு ஏற்பட்ட பிறகு சென்னை உட்பட எங்களுக்கு விருப்பமான தொகுதிகள் அடங்கிய விருப்பப்பட்டியலை திமுகவிடம் வழங்குவோம். இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம், தி.நகரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் இன்று (மார்ச் 23) கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முடிவு செய்யப்பட்டு, திமுகவுடனான பேச்சுவார்த்தையில் மார்க்சிஸ்ட் கட்சிக்கான தொகுதிகள் இன்று இறுதிசெய்யப்படும் என கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM